Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை (23.03.2014) பக்கங்கள் 20 ஓசை - 173

## தொடர் நகை திருட்டு வசமாக மாட்டினார் யுவதி

(வவுனியா)

நகைக்கடைகளில் நகைகளை கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்து அவற்றை திருடிவந்த யுவதி ஒருவர் நேற்று வசமாக மாட்டினார்.

வவுனியா பஸார் வீதியிலுள்ள யுவல் பிளாசா நகையகத்தில் யுவதி தனது கைவரிசையை காட்ட முற்பட்டவேளை பொலிஸாரிடம் வசமாக மாட்டினார்.

மேற்படி யுவதி நகையகம் ஒன்றில் இவ்வாறு திருடிய வேளை சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியிருந்தார். இதனையடுத்து வவுனியா நகரில் உள்ள நகையகங்களுக்கு இதுகுறித்த எச்சரிக்கை விடப்பட்டதுடன் புகைப்படங்களும் வழங்கப்பட்டிருந்தது.

நேற்று நண்பகல் யுவதி தனது கைவரிசையை காட்ட நகையகத்தினுள் சென்ற வேளை ஊழியர்களால் அவசர பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட யுவதி முல்லைத்தீவு மல்லாவியைச்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சி.ஐ.டி.யினர் எனத் தெரிவித்து பட்டப்பகலில் துணிகர கொள்ளை

### உரும்பிராயில் சம்பவம்

(யாழ்.நிருபர்)

சி.ஐ.டி.யினர் எனத் தெரிவித்து துப்பாக்கியை காட்டி வயோதிப தம்பதிகளை அச்சுறுத்தி 8 இலட்சம் பெறுமதியான நகைகள் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமொன்று உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் உரும்பிராய் தெற்கு செல்லத்துரை வீதியிலுள்ள தங்கராசா என்பவரது வீட்டிலேயே இத்துணிகர கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,


திருமண வீட்டிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய பிரஸ்தாப வயோதிப தம்பதியினர் தங்கநகைகளை கழற்றி அலுமாரியில் வைத்துவிட்டு வீட்டின் வெளிப்பகுதியில் இருந்த வேளையில் இலக்கத்தகடு அற்ற புதிய நவீன வெள்ளைக்காரில் வந்த நால்வர் தாம் புலனாய்வுப் பிரிவினர் என்று கூறியதுடன் வீட்டை பரிசோதிக்க வேண்டும் எனக் கூறி அவர்களை வீட்டினுள் அழைத்து சோதனையிட்டனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க



தடுமாறிய

09




புகார்

18

# இலங்கைக்கு எதிரான நடவடிக்கை உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டும்

## ஐ.நா. தெரிவிப்பு



(நியூயோர்க்)

இலங்கைக்கெதிராக எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதனை உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டுமென ஐ.நா. தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா.வின் தலைமைக் காரியாலயத்தில் நாளாந்தம் நடைபெறும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த ஐ.நா. செயலரின் பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது.

இலங்கைக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டும்.

மனித உரிமை சட்டத்தரணி யஸ்மீன் சூகா மற்றும் பிரித்தானிய மனித உரிமைகளுக்கான சட்டப் பேரவை ஆகியவற்றின் அறிக்கை தொடர்பில் எவ்வித நேரடி பதில்களையும் பர்ஹான் வெளியிடவில்லை.

இலங்கை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை நடாத்துவதா அல்லது வேறும் ஓர் பொறிமுறைமையை உருவாக்குவதா என்பதனை உறுப்பு நாடுகளே நிர்ணயிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## வட்டுக்கோட்டையில் தேடுதல் உறுதிப்படுத்தியது இராணுவம்

### எவரும் கைதாகவில்லையெனவும் தெரிவிப்பு

(வட்டுக்கோட்டை)

சந்தேகநபர் ஒருவர் தலைமறைவாக உள்ளாரென கிடைத்த தகவலையடுத்து வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் இராணுவத்தினரும், பொலிஸாரும் சுற்றிவளைப்பு தேடுதலொன்றை மேற்கொண்டனர்.

நேற்று இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது வட்டுக்கோட்டைப் பகுதியில் நூறுக்கும் அதிகமானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், வீடுகள் பலவும் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த சந்தேகநபர் அந்தப் பகுதியில் காணப்படவில்லை எனவும், விசாரணைக்கு உட்படுத்திய எவரையும் தடுத்து வைக்கவோ கைது செய்யவோ இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தீர்மானத்திற்கு ஆதரவு தேடி தென்கொரியாவை வளைக்கும் நவி

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் தென்கொரியாவை வளைத்துப் போடும் முயற்சியில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை அரசாங்கத்தை வடகொரியாவுடன் ஒப்பிட்டுள்ளதாக ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய கூட்டத்தொடரில், தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் யுன் பியுங் சே வை சந்தித்த போதே, நவநீதம்பிள்ளை இவ்வாறு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

தென்கொரிய குழுவுடனான சந்திப்பின் போது, நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக கருத்து வெளியிட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறின.

இந்த உயர்நிலைக் கலந்தாய்வின் போது, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் கூட ஜெனிவாவில் தங்கியிருந்தார்.

எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கைக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் விவாதத்துக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்தப் பகுதிக்கு வழங்கப்படும் குழாய்மூலமான குடிநீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படுவதும், அந்தப் பகுதியில் மக்கள் குடிநீர் தேவைக்கு குடிதண்ணீர் கிணறு ஒன்றை நம்பியிருப்பதுமே இந்த நிலை ஏற்படுவதற்கு ஏதுவாக அமைவதாகவும் அந்தப் பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் அமைப்பிற்கு இலங்கையில் உயிர்கொடுக்க முனையும் கோபி

### பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் புலிகள் அமைப்பிற்கு இலங்கையில் உயிர் கொடுப்பதற்கு பொறுப்பேற்றுள்ளதாக கூறப்படும் கஜீபன் என்றழைக்கப்படும் கோபியை பொலிஸார் தேடி வருவதாகவும் அவர் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குவோருக்கு சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## சொந்த நாட்டின் பிரஜைகளை தண்டிப்பது கவலைக்குரியது

### கூறுகிறது அமெரிக்கா



(கொழும்பு)

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகள் வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சொந்த நாட்டின் பிரஜைகளுக்கு எதிராக தண்டனை விதிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றமை கவலைக்குரியது என சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளுக்காக தைரியமாக குரல் கொடுக்கும் சொந்தப் பிரஜைகள் ஒடுக்கப்படுகின்ற வகையிலான செயற்பாடுகள் ஏற்புடையதல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

## சீரற்ற அறிக்கையே காரணம்

(மானிப்பாய்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரிய முறையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். இதனால் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை பதில் தவிசாளர் ச.சிவகுமார் தலைமையில் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் ஆரம்பமாகியதும் தவிசாளர் உரையை அடுத்து நிகழ்ச்சி நிரல் வாசிக்கப்பட்டது.

இதில் செயற்பாட்டறிக்கை, கடந்த கூட்டறிக்கை என்பன பற்றிய விபரம் கூறப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்க்கட்சியினர் காரசாரமான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

பிரதேசசபை 2013 ஆம் ஆண்டு எந்தவொரு அபிவிருத்தியையும் செய்யவில்லை. உலக வங்கி நிதியுதவியுடன் நெல்சிப் திட்டத்தினால் அமைக்கப்பட்ட வீதிகளைத் தாம் அமைத்ததாக பிரதேசசபையினர் கூறுகின்றனர்.

இந்த வீதிகள் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரால் சிபார்சு செய்யப்பட்டவையாகும். இதனைக் கண்காணிப்பது மட்டுமே பிரதேசசபையின் செயற்பாடு.

மேலும் பிரதேச சபையில் நிறைவேற்றுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஆனால் தொடர்ந்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனவே தவிர எந்தப் பயனும் இல்லை எனக் கூறி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளரும், மானிப்பாய் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) தலைமையிலான நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கூட்டத்தை விட்டு வெளியேறினர். இவர்களைத் தொடர்ந்து ஆளுங்கட்சி உறுப்பினர்களும் வெளியேறினர். இதனால் கூட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

இங்கு இதுபோன்ற செயற்பாடுகள் அடிக்கடி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (54)

# நீலன் திருச்செல்வத்தின் துணைவியார் காலமானர்



(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அரசியல் சட்ட வரைபு நிபுணருமான அமரர் கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் துணைவியார் திருமதி சித்தி திருச்செல்வம் நேற்று முன்தினம் இரவு காலமானார். இன்று காலை அவரது பூதவுடல் கனத்தையில் நல்லடக்கம் செய்யப்படும்.

# விளையாட்டு நிகழ்வும் கட்டடத் திறப்பு விழாவும்

(வடமராட்சி)

அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடாத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவும், புதிய கட்டடத்திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் சுரேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்தின் மனித வள முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தகுமாரி மகேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞானச்செல்வி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன், வடமராட்சி வலய ஆசிரிய ஆலோசகர் இ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

# உற்சவங்களை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயங்களின் வருடாந்த உற்சவங்களை முன்னிட்டு வருடம் தோறும் இடம்பெறும் இரத்ததான நிகழ்வு இவ்வருடமும் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு வட்டுக்கோட்டை, மூளாய் வீதி ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தில் இன்று காலை 8.00 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இரத்ததானம் செய்யவிரும்பும் அடியவர்கள் இதில் பங்கு கொண்டு இரத்ததானம் செய்யுமாறு ஆலய பரிபாலன சபையினரும், தொண்டர் சபையினரும் கேட்டுக்கொள்கின்றனர்.

# மருதங்கேணிக்கு புதிய அம்புலன்ஸ்

(வடமராட்சி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கென சுகாதார அமைச்சினால் புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் ஏற்கனவே 2 அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டு வருவதுடன், புதிய வண்டியும் வழங்கப்பட்டுள்ளதால் வைத்தியசாலை நிர்வாகம் புதிய வண்டியை மருதங்கேணி அரசினர் வைத்திய சாலைக்கு வழங்கியுள்ளது. (109)

# மல்லாகத்தில் விபத்து; ஒருவர் படுகாயம்

மல்லாகம் சந்திக்கருகில் பொலிஸ் வாகனம் ஒன்றும், முச்சக்கர வண்டியும் நேற்று விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டி சாரதி படுகாயங்களுக்குள்ளாகி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகத்தினைச் சேர்ந்த எஸ்.செல்வரத்தினம் என்பவரே காயமடைந்தவராவார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களை இலக்குவைத்து முல்லையில் மதுபான விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பட்டணப் பகுதியில் அண்மையில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட உல்லாச கடற்கரைப் பகுதியில் குறிப்பாக பொது இடத்தில் மதுபான விற்பனை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கடற்கரைப் பகுதியில் பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பய்ணிகள் வருகை தருகின்ற நிலையில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்தே இம் மதுபான விற்பனை இடம்பெறுவதாகவும், இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறித்த விற்பனை நிலையத்தில் மதுபானம் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (67)

# இரு குழுக்களுக்கிடையில் கைகலப்பு; ஐந்து பல்கலை மாணவர்கள் காயம்

(சுன்னாகம்)

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தின் மாணவர்களின் இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்று ஏற்பட்ட கைகலப்பில் ஐந்து மாணவர்கள் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்விலேயே இந்தக் கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 241 | திகதி 2014.03.21 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்: 09 22 35 62 | ஆங்கில எழுத்து: G

பரிசுத் தொகை ரூபா. 15,301,560/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 1 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 7 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 216 | 216,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 310 | 310,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9723 | 583,380/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4943 | 197,720/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 127135 | 2,542,700/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18546 | 370,920/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 15,301,560/- | | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,570,720/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 15,549,900/-

2014.03.25ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்டுகளாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

(C/3359)

web : www.dlb.lk


# பதவி வெற்றிடங்களுக்கு பயிலுநர்கள்; சுகாதார அமைச்சு கோரியுள்ளது

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சில் வெற்றிடங்களாக உள்ள பதவிகளுக்கு பயிலுநர்கள் ஆட்சேர்ப்புத் தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சினால் பதினான்கு பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவராணி அறிவித்துள்ளார்.

மாணவ தாதி பயிலுநர்கள் கடந்த 21.03.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானி பத்திரிகை அறிவித்தலுக்கு அமையவும்,

குடும்பநல சேவை உத்தியோகத்தர் பயிலுநர்கள் கடந்த 14.03.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானி பத்திரிகை அறிவித்தலுக்கமையவும் விண்ணப்பிக்க முடியும்.

மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர்கள், மருந்தாளர் பயிலுநர்கள், உடற்கூறு சிகிச்சையாளர் பயிலுநர்கள், தொழில்சார் சிகிச்சையாளர் பயிலுநர்கள், பரிசோதனை பகுப்பாளர் பயிலுநர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிலுநர்கள், ஆய்வு வரைபாளர் பயிலுநர்கள், இலத்திரனியல் ஆய்வு வரைபாளர் பயிலுநர்கள், பார்வை தொழில்நுட்பவியலாளர் பயிலுநர்கள், பல் தொழில்நுட்பவியலாளர் பயிலுநர்கள், கிருமி விஞ்ஞான உதவியாளர் பயிலுநர்கள், பாடசாலை பல் சிகிச்சையாளர் பயிலுநர்கள் போன்ற 12 பதவி நிலைகளுக்கான பயிலுலுநர்களை இணைப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே இதற்கான மேலதிக விபரங்களை 28.03.2014 ஆம் திகதி வெளியாகவுள்ள அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம் என யாழ்.பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)


## சிறுவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கனகபுரம் பாடசாலைக்கு அண்மையாக 4 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு

தொடர்புக்கு:
மகேந்திரன் பாலச்சந்திரா, இல.54, கனகபுரம், கிளிநொச்சி
தொ.பே.0774155113) R/262

# கிராமங்களிலுள்ள கலை மன்றங்கள் கலையை வளர்க்க முன்வரவேண்டும்

## கலாசார உத்தியோகத்தர் பொ.சுகந்தன் தெரிவிப்பு



(வடமராட்சி)

எமது பண்பாடு சார் கலைகளை அழியவிடாது பாதுகாத்து அக்கலைகளை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்கு ஏதுவாக கிராமங்கள் தோறும் உள்ள கலை மன்றங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் சைவப் புலவருமான பண்டிதர் பொன். சுகந்தன் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் நவீனமயப்படுத்தப்பட்ட இருமாடிக் கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

மன்றத்தலைவர் டாக்டர். எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்றைய காலத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஊறிப்போயுள்ள எமது சமூகத்தை கலைகள் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும். அதற்கு பாரம்பரிய கலைகளை நாடகங்களை கிராமங்கள் தோறும் உள்ள கலை மன்றங்கள் கலை நிகழ்வுகளை நடாத்தி அவற்றை மேடையேற்ற வேண்டும்.

தமது பிள்ளைகள் கலைகளை பயின்று என்ன செய்ய முடியும் என்பது இன்றைய பல பெற்றோர்களின் கேள்வியாகவுள்ளது. இத்தகைய மனநிலையை பெற்றோர்கள் மாற்றவேண்டும். உயர் நிலையில் மாணவர்கள் வந்து வந்தாலும் எமது பாரம்பரியத்தையும், பண்பாடுகளையும் அழியவிடாது அவற்றை பாதுகாக்கும் வகையில்லாவது கலைகளை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

இத்தகைய கலைபண்பாடுகளை கட்டிக்காத்து நவீன காலத்தில் பிரவேசிக்கவுள்ள இளம் சமூகத்தினருக்கு எடுத்துக்காட்டாக கிராம மட்டங்களில் செயற்படும் கலைமன்றங்கள் கலைகளுக்கு புத்துயர் அழித்து கலையை வளர்க்க வேண்டும்.

இதற்கு கலை ஆர்வலர்களும் தம்மாலான பங்களிப்பை செய்யவேண்டும் என்றார். (116)

# கல்வித்திணைக்களத்தில் மோசடி அதிகாரிக்கு வேலை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்வித் திணைக்களத்தில் பதில் கணக்காளராக கடமையாற்றிய எஸ்.சந்திரகுமார் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவர் பதில் கணக்காளராக கடமையாற்றிய காலத்தில் வலய கல்வித்திணைக்களத்தில் காசோலை மோசடியில் ஈடுபட்டதாக விசாரணைகளிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் உடனடியாக செயற்படும்படியாக வேலை நீக்க உத்தரவு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறியினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு மே மாதம் இக்காசோலை மோசடி இடம்பெற்றுள்ளது. கைகழுவுதல் நிதிமூலம் 50 பாடசாலைகளுக்கு 100,000 ரூபா படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை ஒரு பாடசாலைக்கு ரூபா 500,000 எழுதப்பட்டு அந்த பாடசாலை அதிபரை அழைத்து 500,000 காசோலை மாற்றி தனது கணக்கில் வைப்புச் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளார். அதேபோல் மேலும் 4 பாடசாலைகளுக்கு 158,000 ரூபாவுக்கு காசோலை எழுதி அப்பாடசாலை அதிபர்களுக்குத் தெரியாமல் தனது கணக்கில் வைப்புச் செய்துள்ளார். இவை மே மாதத்திற்கும் ஆகஸ்ட் மாதத்திற்கும் இடையில் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி



(வவுனியா)

வவுனியா மகாறம்பைக் குளம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் சாதாரண தர மாணவர்களின் தலைமைத்துவப்பண்பை வளர்க்கும் பயிற்சி வகுப்பு ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றது.

வவுனியா சர்வோதய நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் சு.உதயகுமாரனின் ஆலோசனையின் கீழ் கல்லூரியின் அதிபர் ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்டு குறித்த பாடசாலையில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

சாதாரண தரப்பரீட்சையை எதிர்கொள்ளவிருக்கும் மாணவர்களின் தலைமைத்துவப் பண்பை வளர்க்கும் வகையில் குழுச்செயற்பாடுகள், பொது அறிவு வினாவிடைப் போட்டிகள், மாணவர்களின் தனிப்பட்ட ஆளுமைகள், படைப்புக்கள் தலைமைத்துவம், போன்றவற்றை வெளிக்கொணரும் வகையில் வளவாளர்களின் வளப்பகிர்வுடன் நடைபெற்றது.

பயிற்சி வகுப்பில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர், அத்துடன் பாடசாலையில் வெறுமனே வரையறுக்கப்பட்ட பாடவிதானங்களை கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு குறித்த பயிற்சியில் குழுச்செயற்பாடு, மற்றும் விளையாட்டு மூலமான கல்வி போன்றவை மகிழ்வூட்டியதாகவும் இதுபோன்ற பயிற்சிகள் தொடர்ந்தும் எமது பாடசாலையில் வழங்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது (70)

# நல்லூர் சீரடிசாயி மந்திரில் இலட்சார்ச்சனையும், ஊர்வலமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் சீரடி சாயிபாபாவின் ஏக தின இல்ட்சார்ச்சனையும் சாவடி ஊர்வலமும் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுமென சீரடிசாயி மந்திர் அறிவித்துள்ளது.

காலை 8.30 மணிக்கு சாயிநாதருக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று 9 மணிக்கு இலட்சார்ச்சனை மஹாயாகம் என்பன ஆரம்பமாகும்.

மாலை 6 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சாயிநாதர் விசேட பல்லக்கிலே எழுந்தருளி 7 மணிக்கு ஊர்வலமாக வருவார். பாண்ட் வாத்தியங்களின் இசை முழங்க வானவேடிக்கைகளுடன் இடம்பெறும்.

'பிக்ஷா ஷோளி' வைபவமும் இடம்பெறும். இந்நிகழ்வின் போது அடியார்கள் பாபாவுக்கு உணவுப் பதார்த்தங்களைப் பிச்சைத் தானமாக இடுவார்கள்.

இச்சாவடி ஊர்வலமானது நாவலர் வீதி, மருதடி வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, நாவலர் வீதியூடாக மீண்டும் சாயி மந்திரை வந்தடையும். (01)




மகிந்தவைக் கவிழ்ப்பது யார்? - 08

# நம்மை 'இளிச்சவாய்க்குடி' யாக்கும் இணையப் புரட்சிப் படை!

'உலகமெல்லாம் போராட்டங்களும் புரட்சிகளும் ஆட்சிக் கவிழ்ப்புகளும் நடக்கும்போது, இலங்கையில் மட்டும் அது ஏன் நடக்கக் கூடாது? நாங்களும் Face Book மூலம் ஒரு புரட்சியை நடத்திக் காட்டுகிறோம்' என்று சொல்லிக் கொண்டு பந்தயத்தில் இறங்கியிருக்கிறது ஒரு படை.

முகப்புத்தகத்தைப் பயன்படுத்தி உலகில் பல நல்ல காரியங்களைப் பலரும் செய்கிறார்கள்தான். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'. ஆனால், அது வல்லவனுக்குத்தான்.

இங்கே நம்மவர்களோ உருப்படியான பீரங்கிகளையே அடிக்கமுடியாமல் கோட்டை விட்டவர்கள்.

சாதகமான அரசியற் சூழலையும் சந்தர்ப்பங்களையும் தெரிந்து கொண்டே கைதவற விட்டவர்கள்.

கடவுளே வந்து 'வாழைப்பழத்தை உரித்து வாய்க்குள் வைத்தாலும்' நம் தமிழ்ப் பெருங்குடிக்கு அதை மென்று தின்னத் தெரியாது. அப்படியானவர்களாகவே நாங்கள் இருக்கிறோம்.

என்ன செய்வது, இந்தத் தமிழ்ப் பெருங்குடி ஒரு 'இளிச்சவாய்க்குடி'யாக இருக்கும்வரையில் இதுதான் கதையும் வரலாற்றின் விசித்திரமான நிலையும்.

இந்த விசித்திரத்தில்தான் இந்தப் புதிய 'Face Book புரட்சிப் படை' களத்தில் பீரங்கிகளோடு இறங்கியிருக்கு. இதுக்குத் தோதாக இணையப் புரட்சி அணிகளும் களத்தில் தளபதிகளாகவும் தலைவர்களாகவும் அணிவகுத்து நிற்கின்றனர்.

உங்களில் யாருக்காவது பொழுது போக்குவதற்கு நேரமிருந்தால் தயவு செய்து இந்தப் புரட்சிப்படையின் கள நடவடிக்கையை சற்று அவதானித்துப் பாருங்கள்.

என்ன மாதிரியான முழக்கங்கள்? என்ன மாதிரியான தாக்குதல்கள்? என்ன மாதிரியான வியூகம் வகுத்தல்கள்? என்ன மாதிரியான அதிரடி நடவடிக்கைகள்? எத்தனை வகையான ஒப்பரேஷன்கள்.....

அப்பப்பா! சொல்லி மாளாது. (இதையெல்லாம் பார்க்கப் பார்க்க உங்களுக்குச் சிரிப்பு வந்தால் அடக்கிக் கொள்ளுங்கள். பிரக்கடித்தால் வைத்தியரிடம் செல்லுங்கள். கோவம் வந்தால் தயவு செய்து அதைக் கை விடுங்கள். அதை இவர்களிடம் காட்டி ஒரு பிரயோசனமும் இல்லை. ஏனென்றால், இது ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சி மட்டுமே.).

இந்தப் Face Book படையும் இணையப் புரட்சி அணிகளும் ஒரு மசிரையும் புடுங்கக் கூடியன அல்ல.

'மாட்டைப் பார்த்து காகம் திட்டுவதை'ப் போல, மகிந்தரைப் பார்த்துத் திட்டுவதும், 'இந்தா பாருங்கள், ஆளைக் கவிழ்த்துக் காட்டுகிறோம், ஆட்சியை மாற்றிக் காட்டுகிறோம்' என்று சபதங்களை எடுப்பதும் பிறகு 'அடி சறுக்கீட்டுது, அடுத்த தடவை பாருங்கள்' என்று கதை விடுகிறதும் ஒரு புளித்துப் போன சங்கதியாகீட்டுது.

இந்தப் புரட்சிப் படை நாட்டிலிருந்தபோதோ நாட்டுக்கு வெளியே இருக்கும்போதோ உருப்படியாக எதையும் செய்ததில்லை.

அப்படி அது செய்திருந்தால், தீர்வைக் கண்டிருக்கலாமே! போரினால் பாதிக்கப்பட்ட சனங்களின் துன்ப துயரங்கள் எல்லாம் தீர்ந்திருக்குமே!

ஆனால், அப்படியொன்றுமே நடக்கவில்லை. குறைந்தது, ஒரு மில்லி மீற்றர் அளவிலாவது, இந்தப் பிரச்சினை தீர்ந்திருந்தால் அல்லது தீர்வை நோக்கி நகர்ந்திருந்தால் இந்தப் புரட்சிப் படையின் பின்னால் நாங்கள் நம்பிக்கையோட நிற்கலாம்.

அல்லது இவர்களால் சனங்களின் துன்ப துயரங்கள் தீர்ந்தாலாவது நாங்கள் இவையள் சொல்வதைக் கொஞ்சமாவது கேட்கலாம்.

ஆனால், அப்படியொன்றுமே நடக்காதபோது எதற்காக இந்தப் புண்ணாக்குக் கதைகளை நாங்கள் கேட்க வேணும்? இவர்களின் இந்தக் கோமாளிக்கூத்துகளால் எங்கள் தலைகளை எல்லாம் எதற்காகப் பழுதாக்க வேணும்?

போராட்டம் நடந்தபோது இங்கே இருக்க முடியாமல் போனவர்கள் – புலிகளால் விரட்டப்பட்டு ஓடியவர்கள் எல்லாம் இப்பொழுது அந்தப் புலிகளுக்கே எண்ணை பூசிக்கொண்டிருக்கிறார்கள்.

புலிகளின் மீது உண்மையான விசுவாசம் இருந்திருந்தால் நீங்களும் புலிகளோடு சேர்ந்து நின்றிருக்க வேணும். அவர்களோடு உடன்கட்டை ஏறியிருக்க வேணும்.

சரி, அப்படித்தானில்லை என்றாலும் இந்தப் பாவப்பட்ட சனங்களின் வாழ்க்கைக்காவது உதவலாமே! இரக்கமுள்ள கொஞ்சப் பேர் தங்களால் ஆன அளவுக்கு உதவிகளைச் செய்கின்றனர். இன்னும் பல நாட்டிலுள்ள சனங்களின் தொழில் துறைகளை மேம்படுத்த விரும்புகிறார்கள்.

அதையெல்லாம் கெடுக்கின்றன இந்த இணையக் குஞ்சுகளும் Face Book புரட்சிப் பூக்களும்.

எங்களுக்கும்தான் இதயத்தில் நெருப்பு எரிந்து கொண்டிருக்கு. அதுக்காக தெருவிலே நின்று கொண்டு 'கொழுத்த ஆடு பிடிக்க முடியுமா?'

வேரை வெட்டுகிறவன் அந்த மரத்திற்கு எத்தனை கிளைகள் என்று பார்த்து வெட்ட வேண்டும். - ஹென்றி டேவிட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புடலங்காய் அரசியலும், பம்மாத்தும்!

ஜெனீவா மகாநாட்டுத் திருவிழாவை வழமைபோல இம்முறையும் உற்சாகமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தவர்களிடையே இப்போது கொஞ்சம் சுணக்கம் காணப்படுகிறது.

போர்க்குற்ற விசாரணை என்பது விரலைச் சொடக்குவது போலச் சுலபமானது என்பதாகத் தலைவர்களும் ஊடகங்களும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வளர்த்திருந்ததால், "அமெரிக்கா ஏமாற்றிவிட்டது" என்று சொல்லி இப்போதைக்கு அதை கமுக்கமாக முடித்திருக்கிறார்கள்.

விசாரணை என்று வந்தால் விடுதலைப் புலிகள் தரப்பில் நடந்த மனித உரிமை மீறல்களும் விசாரணை செய்யப்படும் என்பதை மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்ததும், அவ்வாறே இருதரப்பு மீதான விசாரணையையும் தாங்கள் கோருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்ததும், புலம்பெயர் மற்றும் தமிழக சகோதரர்களை சற்று அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டதாகத் தெரிகிறது.

இதுதவிர, சர்வதேசம் ஏற்கத்தக்க உள்ளக விசாரணைக்கான வாய்ப்பை மீண்டும் இலங்கைக்கு வழங்குவதாக நவநீதம்பிள்ளை அவர்கள் அறிவித்திருப்பதும், உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்கா அடி வாங்கித் தெளிந்திருப்பதும், நாம் இந்த சர்வதேசத்தைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருப்பது பற்றிய கேள்விகளை உருவாக்கி விட்டுள்ளன.

மேற்குலகின் தாளத்தை இங்கு போடமுடியாது என்று தெனாவட்டாகவே இலங்கை அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஜெனீவாவில் இலங்கையைக் கைவிட்டு விடமாட்டோம் என்று சீனா வெளிப்படையாகவே அறிவிக்கிறது. அமெரிக்கத் தீர்மானத்தை நிராகரிப்போம் என்று அவுஸ்ரேலியாவும் இப்போது திரும்பி நிற்கிறது.

நாம் விளையாட வேண்டிய பந்து சர்வதேச மைதானத்தில் மட்டுமே விழுந்து கிடக்கவில்லை என்பது சாடையாய் எமது மக்களுக்கு விளங்கி வருமாப்போல் இருக்கிறது. இந்நிலையில், சர்வதேசத்தை விட்டு விட்டால் 2015 நாடாளுமன்றத் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்ற கவலை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வந்திருக்கிறது.

அமெரிக்காவினால் முன்வைக்கப்படப் போகும் பிரேரணை நாம் முன்வைத்த திருத்தங்களுடனேயே வரவிருக்கிறது. தமிழ் மக்கள் தளர்ந்து போய்விடக் கூடாது. படிப்படியாக இது முன்னேறிச் சென்று சில வருடங்களில் சர்வதேச விசாரணை வந்தே தீரும் எனும்படியாக, கலைந்து போய்க்கொண்டிருக்கும் கூட்டத்தைப் பார்த்துக் கத்துகிற நிலையில் கூட்டமைப்பு!

"அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணை நாம் எதிர்பார்த்த வகையில் அமையாதிருந்த போதிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரமே அமெரிக்காவின் பிரேரணையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. நாம் முன்வைத்த முதலாவது கோரிக்கை ராணுவமயமாக்கலை நீக்கி வடக்கில் சிவில் பாதுகாப்பினை ஏற்படுத்தல் மற்றையது வடமாகாணத்திற்கான அரசியல் தீர்வு ஆகியனவேயாகும். அமெரிக்காவினால் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த பிரேரணையில் பிரதானமான இவ்விரு கோரிக்கைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதானது வரவேற்கத்தக்கதாகும்" என்று சொல்லியிருக்கிறார் கூட்டமைப்பு எம்.பியான சுமந்திரன்.

வடக்கில் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்களையும் வளங்களையும் செயற்படுத்த வேண்டும் என்பதே அமெரிக்கப் பிரேரணையின் 6ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஆக, 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளதே தமிழ்மக்களுக்கான தீர்வு என்று சர்வதேசம் சொல்ல வைத்திருப்பதே கூட்டமைப்பின் சாதனை!

என்ன சொல்ல.... போங்கடா உங்களது புடலங்காய் அரசியலும், பம்மாத்தும் என்று துண்டையுதறித் தோளில் போட்டுக் கொண்டு அப்பால் போகவேண்டியிருக்கிறது. -ஆசிரியர்

# மனித உரிமைபேணும் நடவடிக்கைக்கு தடை விதிக்க நீதிமன்றத்தால் முடியாது

## சிரேஷ்ட சட்டத்தரணி வெலியமுன கூறுகிறார்

மனித உரிமை ஆர்வலர்கள் எவரையும், மனித உரிமை மீறல்கள் குறித்து தகவல்களை சேகரிக்க தெற்கிற்கோ அல்லது வடக்கிற்கோ செல்லக் கூடாது என்று தடைவிதிக்க முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆர்வலர்கள் தகவல்களை சேகரிப்பதையோ, பேசுவதையோ தடை செய்ய நீதிமன்றத்தால் முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கைது செய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது விடுதலை செய்யப்பட்ட மனித உரிமை ஆர்வலர்களான ருக்கி பெர்ணான்டோ மற்றும் அருட் தந்தை பிரவீன் மகேசன் ஆகியோருக்கு எதிராக நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பயங்கரவாத விசாரணை பிரிவினர் மேற்கொண்டு வரும் விசாரணைகளுடன் தொடர்புடைய தகவல்களையோ, அறிக்கைகளையோ உள்நாடு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு வழங்குவது விசாரணைகளுக்கு தடையாக அமையும் என்பதால், அதனை தவிர்க்குமாறு நீதிமன்றம் ருக்கி மற்றும் அருட் தந்தை பிரவீன் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளதை கடுமையாக விமர்சித்துள்ள வெலியமுன, நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத சந்தர்ப்பத்தில் இப்படியான உத்தரவுகளைப் பிறப்பிக்க சட்ட ரீதியான அதிகாரம் நீதிமன்றுக்கு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுசில் ஜயசேகர,

நீதிமன்றத்தினால் குற்றவாளி என முடிவு செய்து தண்டனை வழங்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தினமும் நீதிமன்றத்திற்கு வரும் போது ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

குற்றம் எதுவும் சுமத்தப்படாத ருக்கி மற்றும் அருட் தந்தை பிரவீன் எவருக்கு அறிக்கைகளை வெளியிடக் கூடாது என எந்த சட்டத்தின் அடிப்படையில் தடை விதிக்கப்பட்டிருப்பது ஏன் என ஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

# வாடிக்கையாளர் விருப்பமின்றி தேர்தல் பிரசார குறுந்தகவல்

## விதிகளை மீறினால் சட்ட நடவடிக்கை

பல்வேறு தொலைபேசி வலையமைப்புக்களினூடாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அறிவித்தல்கள் பிரசாரம் செய்யப்படுவது சட்டவிரோதமான செயல் என்றும் இதனை தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தொலைபேசிகளினூடாக தேர்தல் பிரசாரங்கள் செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் இது நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தடையானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வாடிக்கையாளர்களின் விருப்பமின்றி தொலைபேசி வலையமைப்புக்களூடாக தேர்தலுடன் தொடர்புடைய பிரசாரங்களை மேற்கொள்வதிலிருந்து தவிர்த்துக்கொள்ளவேண்டும். வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மீறி இவ்வாறான முறையில் பிரசாரங்களை மேற்கொள்ளப்படுவது தேர்தல் மற்றும் சாதாரண சட்டங்கள் மீறப்படும் செயல் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமல் அல்லது அவர்களது விருப்பமின்றி நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசி சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களின் ஊடாக திட்டமிட்ட விதத்தில் இவ்வாறான ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்திகளை அல்லது குறுஞ்செய்திகளை அனுப்புவதை தவிர்க்குமாறு அனைத்து தொலைபேசி வலையமைப்பு நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அதனை மீறும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கடனட்டை மோசடி செய்த கில்லாடி இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

சர்வதேச ரீதியாக கடனட்டை மோசடி தொடர்பில் தேடப்பட்டு வந்த இலங்கையர் ஒருவர் சென்னையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பாரிய கடனட்டை மோசடி தொடர்பில் இன்டர்போலினால் தேடப்பட்டு வரும் முக்கிய சந்தேகநபர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் வைத்து அவர் கடந்த வாரமும் போலியான கடனட்டையை பயன்படுத்தி, பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அவருடன் மேலும் இரண்டு இலங்கையர்களும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கைதான முக்கிய சந்தேகநபரை நாடுகடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பண்டாரவளையிலும் கண்டன ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பண்டாரவளையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பண்டாரவளை நகரில் இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை பத்து மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பிரதேச மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய சுலோகங்கள் மற்றும் பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

# ஜெனிவா பிரேரணை நிராகரிப்பு அவுஸ்ரேலியாவின் பச்சைத் துரோகம்

## அந்நாட்டின் பசுமைக்கட்சி குமுறல்


(கொழும்பு)

இந்த முறை அமெரிக்கா முன்வைக்கவுள்ள இலங்கை தொடர்பான பிரேரணைக்கு அவுஸ்ரேலியா ஆதரவளிக்கவில்லை என்றால், அது மனித உரிமைகளுக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் செய்யும் மிகப் பெரிய துரோகமாக அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் பசுமை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லீ ரிஹனன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்றை கோரும் பிரேரணைக்கு அவுஸ் ரேலியா ஆதரவளிக்காது என்று, அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்திருந்தார்.

அத்துடன் வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எதிராகவும், அவுஸ்ரேலியா மற்றும் பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துன்புறுத்தல்கள் தொடர்பிலான அறிக்கை ஒன்றை பிரித்தானிய மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தது. இவற்றை அடுத்தே லி ரிஹனன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

# கூட்டமைப்புத் தலைவர்களின் மந்திர வார்த்தை



**மனித உரிமைகள் பேரவையின் மூன்று மாநாடுகளிலும் இலங்கைக்கு எதிரான கண்டனப் பிரேரணையை முன்மொழிந்த இந்த நாடுகள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்கவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் மற்றும் பதின்மூன்றாவது திருத்தத்தின் அதிகாரங்கள் என்பவற்றுக்கு அப்பால் இந்தச் சர்வதேச சமூகம் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. இந்த இலட்சணத்தில் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கதை விடுவதைத் தமிழ் மக்கள் நம்பி ஏமாறுவதா? இத்தலைவர்கள் ஏன் இப்படி றீல் விடுகின்றார்கள் என்பது பற்றி மக்கள் சிந்திக்காத வரை கூட்டமைப்பின் காட்டில் மழை பெய்யும்.**

சங்கர சிவன்

இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுவதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் குறைந்தது இருபத்தைந்து வருடங்களுக்காவது பிரச்சினையைத் தள்ளிப்போட்டுத் தங்கள் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வார்கள் என்பது உண்மையெனினும், இந்த நேரத்தில் அவர்களைப் பலவீனப்படுத்துவது தமிழினத்துக்கு நல்லதல்ல என்று எனது நண்பரொருவர் சில தினங்களுக்கு முன் கூறினார்.

கூட்டமைப்பின் அரசியல் பற்றிய எனது விமர்சனக் கட்டுரைகளுக்கு அவரது விமர்சனம் இது. தமிழ் மக்கள் தெரிவு செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுபத்தைந்து வருடங்களாக அம்மக்களைப் பலவீனப்படுத்தி வருவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கலாமா என்ற என் கேள்விக்கு நண்பரிடம் பதில் இருக்கவில்லை.

'இந்த நேரத்தில்' என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்கு எப்போதும் ஒரு மந்திரவார்த்தை. தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி கனிந்து வருகின்ற இந்த நேரத்தில், வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியைத் தட்டி உடைப்பது போலத் தமிழ் மக்கள் நடந்து கொள்ளக்கூடாது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் தேர்தல் மேடைகளில் கூறுவது வழக்கம். சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது சம்பந்தன் கூறினார். வடமாகாண சபைத் தேர்தலுக்கான பிரசாரத்தின் போது சர்வதேச சமூகத்தின் தீர்வு முயற்சி கனிந்து வரும் இந்த நேரத்தில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்குகளை அளிக்க வேண்டும் என்றார் மாவை. எந்த வெளிநாடும் தீர்வுத் திட்டத்துடன் வந்து இறங்கவில்லை.

'இந்த நேரத்தில்' என்ற பதத்தை கூட்டமைப்புத் தலைவர்கள் என்ன நோக்கத்தில் பயன்படுத்துகின்றார்களோ அதே நோக்கத்திலேயே ஆதரவாளர்களும் அதே பதத்தைப் பயன்படுத்துகின்றார்கள். உண்மை நிலை பற்றிச் சிந்திக்காமல் தலைவர்கள் கூறுவதை அப்படியே ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளை மனோபாவம் தான் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தி வைத்திருக்கின்றது.

இந்த நேரத்தில் என்ற பதத்துக்குள் சர்வதேச சமூகத்தைக் கூட்டமைப்புத் தலைவர்கள் உள்ளடக்குகின்றார்கள். இது இவர்களின் புதுமையான கண்டுபிடிப்பு. உலக நாடுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய விவாதத்தையோ அதன் தீர்வு பற்றிய ஆய்வையோ மேற்கொண்டதாக இல்லை. சில தனி மனிதர்கள் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி ஆய்வு செய்திருக்கின்றார்கள். அதைச் சர்வதேச சமூகத்தின் ஆய்வாகக் கொள்ள முடியாது. அமெரிக்காவாக இருந்தாலென்ன ஐரோப்பாவின் முன்னணி நாடுகளாக இருந்தாலென்ன இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய உத்தியோகபூர்வமான ஆய்வு எதையும் மேற்கொள்ளவில்லை. உத்தியோகபூர்வமான நிலைப்பாடு எதையும் வெளிப்படுத்தவில்லை. இந்த நாடுகளையே கூட்டமைப்பினர் சர்வதேச சமூகம் எனக் கூறுகின்றனர். மனித உரிமைகள் பேரவையின் மூன்று மாநாடுகளிலும் இலங்கைக்கு எதிரான கண்டனப் பிரேரணையை முன்மொழிந்த இந்த நாடுகள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்கவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் மற்றும் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அதிகாரங்கள் என்பவற்றுக்கு அப்பால் இந்தச் சர்வதேச சமூகம் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

**இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி ஏகமனதான நிலைப்பாடு கூட்டமைப்புத் தலைவர்களிடம் இல்லை. தனிநாடு, அதிகாரப் பகிர்வு, சமஷ்டி என்று வெவ்வேறு தீர்வுகளை வலியுறுத்துபவர்களின் கூட்டமாகவே கூட்டமைப்பு இருக்கின்றது. உட்கட்சி விவாதம் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டால் கூட்டமைப்பு உடைந்துவிடும். கூட்டமைப்பில் பிளவு ஏற்படுவது இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பதவிகளை இழக்கும் நிலையைத் தோற்றுவிக்கும். இனப்பிரச்சினையின் தீர்விலும் பார்க்கத் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு அதிகளவு முக்கியத்தும் அளிப்பவர்களாக இத்தலைவர்கள் இருப்பதால் சர்வதேச சமூகத்தின் பெயரைச் சொல்லி இனப்பிரச்சினையை ஓரங்கட்டுகின்றார்கள்.**

இந்த இலட்சணத்தில் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கதை விடுவதைத் தமிழ் மக்கள் நம்பி ஏமாறுவதா? இத்தலைவர்கள் ஏன் இப்படி றீல் விடுகின்றார்கள் என்பது பற்றி மக்கள் சிந்திக்காத வரை கூட்டமைப்பின் காட்டில் மழை பெய்யும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்து வாக்குகள் பெற்ற தலைவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுவது ஏன் என்பது பற்றித் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். முதலாவதாக இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி ஏகமனதான நிலைப்பாடு கூட்டமைப்புத் தலைவர்களிடம் இல்லை. தனிநாடு, அதிகாரப் பகிர்வு, சமஷ்டி என்று வெவ்வேறு தீர்வுகளை வலியுறுத்துபவர்களின் கூட்டமாகவே கூட்டமைப்பு இருக்கின்றது. உட்கட்சி விவாதம் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டால் கூட்டமைப்பு உடைந்துவிடும். கூட்டமைப்பில் பிளவு ஏற்படுவது இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பதவிகளை இழக்கும் நிலையைத் தோற்றுவிக்கும். இனப்பிரச்சினையின் தீர்விலும் பார்க்கத் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு அதிகளவு முக்கியத்தும் அளிப்பவர்களாக இத்தலைவர்கள் இருப்பதால் சர்வதேச சமூகத்தின் பெயரைச் சொல்லி இனப்பிரச்சினையை ஓரங்கட்டுகின்றார்கள். இனப்பிரச்சினைக்கு என்ன நடந்தாலும் தங்கள் பதவிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பது இவர்களின் நிலைப்பாடு.


இரண்டாவதாக நோகாமல் அரசியல் செய்வதற்குப் பழகிக்கொண்டார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சத்தியாக்கிரகம், வீதி ஆர்ப்பாட்டம் என்று மக்களை வீதியில் இறக்கிச் சில சுலோகங்களை முழங்குவதன் மூலம் தங்கள் போராட்டத்தை முடித்துக் கொள்வார்கள். இது எதிர்ப்பு அரசியல் இவர்களுக்குக் கற்றுத் தந்த பாடம். மக்களிடம் எதிர்ப்பு அரசியல் உணர்வை வளர்த்துவிட்டால் போதும் கோஷங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு விடுவார்கள். பிரச்சினையின் தீர்வுக்காக முயற்சிக்காமலே பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

இணக்க அரசியல் மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எத்தனையோ விடயங்களைச் சாதித்திருக்கின்றார். கிளிநொச்சியில் பொறியியல் பல்கலைக்கழகம், பல பிரதேசங்களிலிருந்து இராணுவத்தின் வெளியேற்றம், படிப்படியான மீள்குடியேற்றம், புதிய வீதிகள், புதிய கட்டடங்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். எதிர்ப்பு அரசியலுக்காக மக்களை அணி திரட்டுபவர்கள் இதுவரை சாதித்தது என்ன? உணர்ச்சிகரமான கோஷங்கள் மூலம் தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதைத் தவிர வேறு எதுவும் இல்லை. தங்கள் நாடாளுமன்றப் பதவிகள் காப்பாற்றப்பட்டால் இவர்களுக்குப் போதும். மக்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை.

மிகவும் முக்கியமான அடுத்த விடயம். புலம் பெயர் அமைப்புகள். புலிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலை அச்சொட்டாகப் பின்பற்றும் பல புலம்பெயர் அமைப்புகள் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் செயலாணைக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட்ட காலத்தில் இந்தப் புலம் பெயர் அமைப்புகளுக்கும் கூட்டமைப்புத் தலைவர்களுக்குமிடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. புலிகளின் தோல்விக்குப் பின்னரும் இந்த உறவு தொடர்கின்றது. கூட்டமைப்பின் நிதி வளத்தில் பெரும் பகுதி புலம் பெயர் அமைப்புகளால் வழங்கப்படுகின்றது. அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்காகக் கூட்டமைப்புப் புலம் பெயர் அமைப்புகள் வழங்குகின்ற லஞ்சம் தான் இந்த நிதி வளம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறும் பணம் மற்றும் சுகபோக வசதிகளையும் புலம் பெயர் அமைப்புகளின் நிதியையும் ஒன்றாக அனுபவித்துக்கொண்டுசொகுசு வாழ்க்கை வாழ்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைக் கைவிடு வார்களா? கைவிட்டால் மக்களுக்கு எந்தச்சேவையும் செய்யாமல் சொகுசு வாகனங்களில் பவனி வருவது எப்படி? மனைவி ம்க்களை வளமான் வெளிநாடுகளில் குடியமர்த்துவது எப்படி? தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர வேண்டும் என்ற அக்கறை கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இல்லை. பிரச்சினை தொடர்வதுதான் தங்கள் பதவிகளுக்கு உத்தரவாதம் என்று கருதுகின்றார்கள். தலைவர்களின் சொந்த நலனுக்காகத் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலனைத் தாரைவார்க்கும் சுயநல அரசியலைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். சரியான அரசியல் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினை உட்படச் சகல பிரச்சினைகளினதும் தீர்வை நோக்கிய நகர்வு இடம்பெறும்.

# இந்திய படையினருக்கு எதிராக ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு

## காணாமற்போனமைக்கு அவர்களும் காரணம் என்று



வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஆட்கள் காணாமற்போனமை தொடர்பாக இந்தியப் படைக்கு எதிராகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கைகள் குறித்து மேற்படி ஆணைக்குழுவில் பல முறைப்பாடுகள் செய்யப்படடுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பதிவான காணாமற்போதல்கள் மற்றும் கடத்தல்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதியினால் ஆணைக்குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவினர் தற்போது கிழக்கு மாகாணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடத்தல்கள் மற்றும் காணாமற்போதல்கள் தொடர்பிலான பல முறைப்பாடுகள் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராக செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காணாமற்போதல் சம்பவங்களுக்கு இந்திய அமைதி காக்கும் படையினர் பொறுப்பு என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காணாமற்போதல் சம்பவங்கள் குறித்தே ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தி வருவதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படையினர் 1987- 1990 ஆம் ஆண்டு வரையில் இலங்கையல் நிலை கொண்டிருந்மை குறிப்பிடத்தக்கது.

# தளம்பாது ரூபாவின் பெறுமதி



(கொழும்பு)

நடப்பு ஆண்டின் இலங்கை ரூபாவின் பெறுமதி நிலையானதாக அமைந்திருக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்திருந்தார்.

ஏற்றுமதி மூலமான வருமதிகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் இந்த எதிர்பார்ப்பு உறுதியாக காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் முதல் ரூபாவின் பெறுமதி உறுதியாக காணப்படுகிறது. சாதாரணமாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ரூபாவின் பெறுமதி சரிவடையும், ஏனெனில் புதுவருட பண்டிகையை முன்னிட்டு இறக்குமதிகள் அதிகரித்துக் காணப்படும்.

ஆயினும் இந்த ஆண்டு அதிகளவு ஏற்றுமதிகள் காணப்படுவதால் இந்த நிலையை எதிர்கொள்ளவில்லை என அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

# இலங்கையின் நிலவரம் கவனம் செலுத்துகிறது பிரான்ஸ்

இலங்கையில் மனித உரிமைகள் நிலவரத்தை பிரான்ஸ் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சை மேற்கோள் காட்டி கொழும்பில உள்ள பிரான்ஸ் தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

தண்டனையிலிருந்து விலக்களிக்கும் முறையுடன் போராடுவதும், எந்தச் சூழ்நிலையிலும் மனித உரிமைகளை மதித்தலும் மீள் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு மிக அத்தியாவசியமானவையாகும் இலங்கையில் தேசிய மீள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதை அதிகாரத் தரப்பினருக்கு உணர்த்துவதற்காக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணை வரையப்படுவதற்கு பிரான்ஸ் தற்போது ஆதரவளிக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது

# மனித உரிமைகளின் பாதுகாவலர்கள் மீது அழுத்தம் பிரயோகிக்க முஸ்தீபு

## "எகனமிஸ்ட" பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தங்களுக்கு எதிராக அரசு பாரிய அழுத்தம் கொடுக்கும் முன்னெடுப்பு ஒன்றை மேற்கொள்ளலாம் என்ற அச்சத்தில் தென்னிலங்கையில் உள்ள மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள் இருப்பதாக த எகனமிஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் அரசு மனித உரிமைகள் விடயத்தில் மிலேட்சத்தனமாக நடந்து கொள்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற மனித உரிமைகள் மாநாட்டில் இவ்வாறான விவகாரமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இதனை பொருட்படுததாத அரசாங்கம் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதுடன் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிரான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது.

கடந்த வாரம் பாலேந்திரன் ஜெயகுமாரி என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.


தொடர்ந்து கிளிநொச்சியில் வைத்து ரூக்கி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவின் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறான கைதுகள் வடக்கிலும் தெற்கிலும் மேலும் பாரிய கைதுகள் இடம்பெறவுள்ளமைக்காக சமிஞ்கைகளாக இருக்கலாம் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்கா முன்வைக்கவுள்ள பிரேரணையுடன் மனித உரிமைகள் ஆணையாளரும் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்வார்.

இந்த அறிக்கைக்கான தகவல்களை வழங்கியவர்கள் தேடப்பட்டு கைது செய்யப்படலாம என்று அச்சம் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மத்தியில் தற்போது இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுளளது.

# கரையோர பாதுகாப்புக்கு வலுச் சேர்க்க ஜப்பானியத் தளபதியுடன் பேச்சு



(கொழும்பு)

ஜப்பானின் கரையோரப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கான துணைத் தளபதி வைஸ் அட்மிரால் ஹொரரோசி சுசுகி தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவினர் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைசசின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

இக் குழுவினரின் கலந்துரையாடலில் இலங்கை கரையோரப் பாதுகாப்புப் படையின் இயக்குனர் ரியார் அட்மிரால் ரவி விஜேகுணரத்னவும் கலந்து கொண்டார்.

இச் சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலாளருக்கும் ஜப்பானின் கரையோரப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கான துணைத் தளபதி வைஸ் அட்மிரால் ஹொரரோசி சுசுகி தலைமையிலான குழுவினருக்குமிடையே இருதரப்பு கரையோரப் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

# உள்ளூராட்சி தேர்தல்கள் தயாராகிறது புதிய நடைமுறை

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி தேர்தல் நடைமுறைகளில் மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

இதற்கான நடைமுறைகள் அடங்கிய புதிய விதிகளின் படி கோர்வை உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் இந்தப் புதிய விதிகளின்படியே இந்தத் தேர்தல் இடம்பெறவிருக்கிறது.

இத்திட்டத்தின்படி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இனிவரும் காலங்களில் வட்டார முறையில் நடத்தப்படவுள்ளது. இதற்காகநாட்டிலுள்ள 367 உள்ளூராட்சி சபைகளினதும் நிலப் பிரதேசங்கள் வட்டாரங்களாகப் பிரிக்கப்படுவதற்காக தேசிய மற்றும் மாவட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டு அவை தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றன.



மாவட்டக் குழு தனது அறிக்கையை தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்ததை அடுத்து தற்போது வட்டாரங்கள் எல்லாம் அடையாளப்படுத்தப்பட்டு அப்பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இறுதி அறிக்கையை தயாரிப்பது சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கியதான ஆலோசனைக் கூட்டம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைசசர் ஏ.எல்.எம். அதாஉல்லா அவர்களுக்கும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குமிடையில் அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் ரவி திசாநாயக்க உள்ளிட்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.



சிறைக்கைதிகளுக்கான தனியான முதலாவது பாடசாலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்தார். ஹோமாகம பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாடசாலையின் வகுப்பறைகளை ஜனாதிபதி பார்வையிட்டார் அதன் காட்சிகள் சில இங்கே...


கல்வியங்காடு சிவஞானப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் சுவாமி இரதத்துக்கு எழுந்தருளுவதையும், இரதம் வீதிவலம் வருவதையும், தவில் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெறுவதையும் காணலாம். (137)

# ஆங்கில மொழியில் பாடவிதானம் போதிப்பது இமாலய சாதனையாகும்

## ஈ.சிற்றி ஆங்கில கல்லூரியின் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலே ஆங்கில மொழிமூலம் ஆரம்பப்பிரிவு தொடங்கி உயர்தரம் வரை கல்வி புகட்டுவதென்பது சிரமமான விடயம் அதையும் தாண்டி சாதித்துக் காட்டுவோம் எனத் துணிவுடன் அரசின் அங்கீகாரம் பெற்று அரசபாடவிதானத்தின் படி ஆங்கில மொழிமூலம் மாணவர்களுக்கு கல்விபுகட்டுவதென்பது இமாலய சாதனையாகும் என ஈ.சிற்றி ஆங்கில கல்லூரியின் தலைவர் லயன் ஜெ.ரஜீவன் தெரிவித்தார்.

கலைமகள் சர்வதேச ஆங்கில கல்லூரியின் மெய்வல்லுனர் போட்டி நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலைமகள் ஆங்கிலக் கல்லூரியானது அரச பாடவிதானத்துக்கமைய ஆங்கில மொழி மூலம் கல்விபுகட்டி வறிய மாணவர்களுக்கு உதவி புரிவதில் முன்னின்று உழைத்துவருவது பாராட்டத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்திலே விரல் விட்டு எண்ணக் கூடிய சர்வதேச பாடசாலைகளில் கலை மகள் கல்லூரியும் ஒன்றாகும்.

இத்தகைய கல்வி நிறுவனங்களுக்கு பெற்றோர், நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் பூரண ஆதரவு நல்க வேண்டும். தங்களது பிள்ளைகளை இது போன்ற சர்வதேச ஆங்கிலக் கல்லூரிகளில் இணைப்பதன் மூலம் ஆங்கிலத்திலே புலமைமிக்கவர்களை உருவாக்குவதன் மூலம் நாட்டிற்கு பெருமை சேர்க்க முடியும் என்றார்.

# தெல்லிப்பளை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம்வருமாறு,

ஆக்கம் எழுத்து பிரிவு - 01

ப.திவாரகா (அருணோதயாக் கல்லூரி), ஜெ.கிருஷ்ணிகா (தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி), அ.அபிராமி (மகாஜனாக் கல்லூரி).

கட்டுரை வரைதல் பிரிவு 02

ஜே.யசித் (அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்), ச.நிதுஷாளினி (யூனியன் கல்லூரி), சு.திஷாந் (அருணோதயாக் கல்லூரி).

பிரிவு 03

ஆ.நிருபா (கட்டுவன் புலம் ம.வி), கு.வேணுகா (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), ந.பிரிந்திகா (அருணோதயக் கல்லூரி).

கட்டுரை வரைதலும் இலக்கிய நயத்தலும் பிரிவு 04

இ.இனோஷா (அருணோதயக் கல்லூரி), பூ.கஸ்தூரி (மல்லாகம் மகா வித்தியாலயம்), வி.சியானு (குளமங்கால் றோ.க.வித்தியாலயம்).

பிரிவு 05

கு.நிகேதினி (அருணோதயக் கல்லூரி), வ.நிதுஷா (மகாஜனக் கல்லூரி), ந.பவிஷா (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்).

கவிதை ஆக்கம், பிரிவு - 04

சி.கௌசல்யா (மல்லாகம் மகா வித்தியாலயம்), பி.பவதாரணி (மகாஜனாக் கல்லூரி), இ.சிவதாரணி (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்).

பிரிவு 05

சி.கஜானி (மல்லாகம் மகா வித்தியாலயம்), சி.சிவவராகி (வயாவிளான் ம.ம.வி), சி.கமிஸ்ரா (யூனியன் கல்லூரி),

சிறுகதை ஆக்கம், பிரிவு - 04

சே.உமையாளினி (அருணோதயாக் கல்லூரி), இ.விதுஷா (யூனியன் கல்லூரி), வி.சாருஜா (நடேஸ்வராக் கல்லூரி). (தொடரும்...)(17)

# ஜி.எஸ்.ஈ.பி.திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு கட்டடங்கள்

(வடமராட்சி)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ஜி.எஸ்.ஈ.பி.திட்டத்தின் கீழ் 14.5 மில்லியன் ரூபா செலவில் இருமாடிக்கட்டடம் (110x25) ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதே திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் 9 மில்லியன் ரூபா செலவில் கட்டடமொன்றும் (110x25) நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

ஜி.எஸ்.ஈ.பி.திட்டத்தின் கீழ் உடுத்துறை இந்து ஆரம்பப்பாடசாலையிலும் 7 மில்லியன் ரூபா செலவில் கட்டடமொன்றும் (110x25) நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (01)

# தவணைப் பரீட்சை

(வடமராட்சி)

வடமராட்சி வலயப் பாடசாலைகளின் முதலாந்தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 8ஆம் திகதி வரை நடைபெறுமென வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (01)

# நிதி துஷ்பிரயோகம் கல்வி அதிகாரிக்கு இடமாற்றம்

முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளராக பணிபுரிந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIIஐச் சேர்ந்த மா.ராஜகுமார் நிதி துஷ்பிரயோகம் ,நிர்வாகப் பிரச்சினை சம்பந்தமான விசாரணை முடியும் வரை வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு தற்காலிகமாக இணைக்கப் பட்டுள்ளார்.

இவருக்கான உத்தரவினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிறப்பித்துள்ளார். துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி.மாலினி வெலிங்ரன் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளராக பதில் கடமையாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முள்ளி மயானத்தை புனரமைக்க கோரிக்கை

(வரணி)

வரணி முள்ளி ஐயன்கண்டி மயானமடம் முன்பு ஆறுதூண்களுடன் காணப்பட்டது.தற்போது மிக மோசமான முறையில் ஐந்து தூண்களுடன் விழும் நிலையில் காட்சி அளிக்கின்றது.

இந்த மடம் இவ்வாறான நிலையில் உள்ளதால் தகனம் செய்யச் செல்வோர் சுட்டெரிக்கும் வெயில், மழைக் காலத்தில் மழையிலும் நின்றே கடமைகளைச் செய்து வருகின்றனர். எனவே உரியவர்கள் இனியும் காலம் தாழ்த்தாது இந்த மடத்தை புனரமைப்புச் செய்ய முன்வர வேண்டும் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (150)

# முரசின் இன்றைய பலன்



(23.03.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 09 ஆம் திகதி.
மரணயோகம் / ஸப்தமி. கேட்டை நட்சத்திரம் பி.ப. 01.30 வரை.
பின் மூலம்.
இராகு காலம் 04.46 - 06.16 வரை. சுபநேரம் 09.16 - 10.46 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வீடு, வாகன, பெண் பிள்ளையின் பாதுகாப்பில் கூடுதலான கவனம் தேவை, இல்லறத்துணையின் ஆறுதலான வார்த்தை மனதிற்கு இதமளிக்கும். |
| ரிஷபம் | திகதி தப்பிய பொருட்கள் பிள்ளையார் கணக்கில் எழுதவேண்டிய அவலம், வியாபாரம் சிறக்க புதிய வழியைக் கண்டறிதல். |
| மிதுனம் | காலாவதியான பொருட்களைக் கண்டுபிடித்து தண்டம் வழங்கல், உடல் நலத்தைப் பேண ஊக்கம் காட்டமுஸ்தீபு. |
| கடகம் | ஆவணங்களின் குறைபாட்டினால் பென்சன் பெறமுடியாத நஷ்ட நிலைதொடர்தல், சில முடிவுகளை மறுபரிசீலனை செய்ய முற்படல். |
| சிம்மம் | கடனைப் பெறச்சென்றதால் களேபரம் உண்டாதல், ஒப்பந்தங்கள் நிலையை நோக்கிச் சென்றதால் புதியன தொடர மனமின்மை. |
| கன்னி | ஈடுபடும் செயல்களில் அவதானமாக இருந்ததால் நன்மை, புதிய முதலீடுகளை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளவும். |
| துலாம் | செய்தொழிலில் ஏற்பட்டபிரச்சினையை சமயோசிதமாக தீர்த்து வைத்தல், ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சிக்கனத்தில் நாட்டம் கொள்ளல். |
| விருச்சிகம் | மனக்குழப்பம் ஏற்பட்டதால் பதகளிப்பு தக்கவைத்தல், நிலுவைகள் வந்து சேர்வதால் மனதில் மகிழ்ச்சி தங்கல். |
| தனுசு | திக்குவாய் பிள்ளையின் நிலையைப் போக்க தெய்வதலத்தை நாடுதல், உற்பத்தி மற்றும் விற்பனை இலாபகரமாக அமையும். |
| மகரம் | அடகுப் பொருள் மீட்க பணவசதி ஏற்படும், எதிர் மறையாக இருந்து அனுசூல நிலைக்கு வருதல். |
| கும்பம் | துணையின் கருத்துக்கு செவிசாய்த்ததால் துயர் விலகிப் போதல், உங்களின் பேச்சில் வசீகரத் தன்மை இருப்பதினால் காரிய சித்தி ஏற்படல். |
| மீனம் | புத்திரனின் கருணை மிகுந்த செயல் பெருமையைச் சேர்க்கும், மனைவி, கணவர் வழி சார்ந்த உறவினரை விமர்சிக்க வேண்டாம். |

## ஐந்தாவது இந்துக்களின் போர்

# யாழ். இந்து பெரு வெற்றி



(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் போர் என வர்ணிக் கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றது.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்றும், நேற்று முன்தினமும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆறு விக் கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை யாழ். இந்துக் கல்லூரி அணி தொடர்ந்தது. ஒரு முனையில் அதிரடியாக ஆடிய மதுஷன் அணி யின் ஓட்ட எண்ணிக்கையை வேக மாக உயர்த்தினார். இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி முதல் இனிங் ஸிற்காக 66 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் 73 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 62, சிவலக்ஷன் 34, பானுகோபன் 26, கல்கோபன் 28, றுக்ஸ்மன் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யசோதரன் நான்கு, கஜேந்திரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

74 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக கள மிறங்கிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூ ரி அணி பானுகோபனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இறுதியில் கொழும்பு பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக 30 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிவா- கரன் 74 பந்துகளை எதிர்கொண்டு 27 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் பானுகோபன் 31 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, சிந்துஜன், மதுஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

23 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி நான்கு ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி இந்துக்களின் போர் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். இந்துக் கல்லூரி வீரர் மதுஷன், சிறந்த பந்து வீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரி வீரர் பானுகோபன், சிறந்த துடுப்பாட்ட வீரராக கொழும்பு பம்பலப்பிட்டி இந் துக் கல்லூரி வீரர் கஜேந்திரன், சிறந்த களத்தடுப்பாளராக யாழ். இந்துக் கல்லூரி வீரர் கல்கோபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் இரு கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண் டனர்.

(எஸ்.பி., 48)


















# 5 ஓட்டங்களால் வென்றது இலங்கை

(சிட்டாகொங்)

குசால் பெரேராவின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் குழு 1இல் இடம்பிடித்துள்ள இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான லீக் போட்டி நேற்று சிட்டகொங்கில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இலங்கை அணிக்கு குசால் பெரேரா அதிரடியாக ஆடி அணிக்கு வலுவான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தார். ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டபோதும் மறுமுனையில் அதிரடியாக ஆடிய குசால் பெரேரா அரைச்சதம் அடித்து அசத்தினார். இவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இலங்கை அணியின் ஓட்டவேகம் மட்டுப்படுத்தப்பட்டது. இருப்பினும் மத்தியூஸ் பொறுப்புடன் செயற்பட்டு அணியை ஸ்திர நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறை வில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குசால் பெரேரா 40 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 61, மத்தியூஸ் 32 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இம்ரான் தாஹிர் மூன்று, ஸ்ரெய்ன், எம். மோர்கன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடியது. இருப்பினும் இலங்கை அணியின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டுமினி 39, டி கொக் 25, அம்லா 23, டி வில்லியர்ஸ் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சேனநாயக்க இரண்டு, மலிங்க, மத்தியூஸ், மெண்டிஸ், குலசேகர ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக குசால் பெரேரா தெரிவு செய்யப்பட்டார்.

# கிண்ணம் வென்றது இணுவில் கலைஒளி



(அச்சுவேலி)

அச்சுவேலி கதிரொளி றொக்கெட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இணுவில் கலை ஒளி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் அச்சுவேலி கதிரொளி றொக்கெட்ஸ்ட் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வாரம் அச்சுவேலி யூனியன் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இணுவில் கலைஒளி அணியும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் மோதின. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற குப்பிளான் குறிஞ்சிக்குமரன். அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கலை ஒளி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்திக் 22, தர்சன் 20, கோபிதாஸ் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தாஸ் நான்கு, சாந்தன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 82 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய குறிஞ்சிக்குமரன் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்ற இணுவில் கலைஒளி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக கலைஒளி அணியின் கார்த்திக் தெரிவு செய்யப்பட்டார். (48)

# டிறிபேக் தாரகை வெற்றி

(சாவகச்சேரி)

ருவென்ரி-20 போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் தாரகை அணி 50 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மற்றும் டிறிபேக் தாரகை அணிகள் மோதிய சிநேகபூர்வ ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய டிறிபேக் தாரகை அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ்.பிரதி 54 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 186 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி 17.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இப்போட்டியில், சிறந்த பந்துவீச்சாளராக தாரகை அணியின் என்.கண்ணன், சிறந்த களத்தடுப்பாளராக டிறிபேக் கல்லூரியின் எஸ். தனுஜன், ஆட்டநாயகனாக தாரகை அணியின் எஸ்.பிரவீன், சகலதுறை வீரராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் எஸ்.லஷ்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகமன்றத் தலைவர் வ.சிறிபிரகாஷ், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் எஸ்.விமலதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்கள்.

## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20
Bangladesh 2014

**அவுஸ்ரேலியா எதிர் பாகிஸ்தான்**
**இடம்: மீர்பூர் நேரம் : 3.00 மணி**

**இந்தியா எதிர் மேற்கிந்தியத்தீவுகள்**
**இடம்: மீர்பூர் நேரம் : 7.00 மணி**

# முதல் போட்டியில் தடுமாறிய செரீனா



(மியாமி)

ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், மியாமி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் தடுமாற்றத்துடன் வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் ப்ளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரில் இப்போட்டி நடைபெற்று வருகிறது. இதன் முதல் சுற்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் சர்வதேச அளவில் முன்னணியில் உள்ள வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். அதனால் முதல் சுற்றிலிருந்தே ஆட்டம் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

மியாமி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் 5 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளவர் செரீனா. இவர், கஜகஸ்தானின் யரோஸ்லவா ஷவதோவாவுடன் மோதினார்.

எதிர் வீராங்கனைகளை ஆரம்பம் முதலே நிலைகுலைய வைத்து ஆட்டத்தை தன் பக்கம் திருப்பும் குணம் படைத்த செரீனா, இம்முறை அதில் சரிவைச் சந்தித்தார். முதல் செட்டை செரீனாதான் கைப்பற்றினார் என்றாலும் யரோஸ்லவாவுடன் கடும் சவாலைச் சந்திக்க நேரிட்டது. இதனால் முதல் செட் 7-6 (9-7) என்ற கணக்கில் நீண்ட நேரம் நீடித்தது. இதில், ஒரு கட்டத்தில் 3-1 என்ற கணக்கில் வில்லியம்ஸ் பின்தங்கியிருந்தார். ஆனால், அதைத் தொடர்ந்து வேகமாகப் புள்ளிகளைப் பெற்றார்.

2ஆவது செட்டில் சுதாகரித்துக் கொண்ட செரீனா, அதனை 6-2 என்ற கணக்கில் எளிதாக வென்றார். இறுதியில் 7-6, 6-2 என்ற செட் கணக்கில் வென்ற செரீனா இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

இந்த ஆட்டம் குறித்து செரீனா கூறுகையில், முதல் செட் மிகவும் கடினமாக இருந்தது. யோஸ்லவா சிறப்பாக விளையாடினார். அவர் பந்தைத் திருப்பிய விதம் நன்றாக இருந்தது. அதனால், அமைதி காத்து எனது ஆற்றலை வெளிப்படுத்தி வெற்றி பெற்றேன் என்றார்.

# நெதர்லாந்து அணியின் வியத்தகு சாதனைகள்

சர்வதேச ருவென்ரி-20 கிரிக்கெட்டில் நெதர்லாந்து அணி நேற்று முன்தினம் அயர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் பல வியக்கத்தக்க சாதனைகளை படைத்தது. அதன் விபரம் வருமாறு:

* தனது இனிங்ஸில் நெதர்லாந்து அணி 19 சிக்ஸர்களை நொறுக்கியது. சர்வதேச ருவென்ரி-20 கிரிக்கெட்டில் ஓர் இனிங்ஸில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகபட்ச சிக்ஸர்கள் இதுவாகும். இதற்கு முன்பு 2013ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்ரேலிய அணி 18 சிக்சர் அடித்ததே சாதனையாக இருந்தது.

* இந்த ஆட்டத்தில் நெதர்லாந்தும் (19 சிக்ஸர்), அயர்லாந்தும் (11 சிக்ஸர்) மொத்தம் 30 சிக்ஸர்கள் எடுத்துள்ளன. இதுவும் உலக சாதனை தான். இதற்கு முன்பு நியூசிலாந்து-இந்தியா (2009 ஆம் ஆண்டு), அவுஸ்ரேலியா-இந்தியா (2010ஆம் ஆண்டு) இடையிலான ஆட்டங்களில் தலா 24 சிக்ஸர் எடுக்கப்பட்டதே ஓர் ஆட்டத்தில் அதிகபட்ச சிக்ஸர் எண்ணிக்கையாக இருந்தது. அந்தச் சாதனையும் காலியானது.

* பவர்-பிளேயில் (முதல் 6 ஓவர்) நெதர்லாந்து 91 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தது. இதற்கு முன்பு பவர்-பிளேயில் நியூசிலாந்து அணி 2009ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 90 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

* நெதர்லாந்து வீரர் 30 வயதான ஸ்ரீபன் மைபேர்க் 17 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்தார். ருவென்ரி-20 ஓவர் கிரிக்கெட்டில் 2ஆவது அதிவேக அரைச்சதம் இதுவாகும். இந்தியாவின் யுவராஜ்சிங் 12 பந்துகளில் (2007 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக) அரைச்சதம்அடித்து இந்த சாதனைப்பட்டியலில் முதலிடம் வகிக்கிறார். அடுத்த இடத்தில் அயர்லாந்தின் போல் ஸ்டிர்லிங் 17 பந்தில் (ஆப்கானிஸ்தானுக்கு எதிராக, 2012ஆம்ஆண்டு) அரைச்சதம் அடித்திருந்தார். அவருடன் ஸ்ரீபன் மைபேர்க் 2ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.






## பின்லாந்து வீரர் சாதனை

(மியாமி)


மியாமி ரென்னிஸ் போட்டியில் பின்லாந்து வீரர் ஜர்கோ நிமைன் சாதனை புரிந்துள்ளார்.

மியாமியில் நடந்து வரும் சோனி ஏ.டி.பி. ரென்னிஸ் போட்டி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் பின்லாந்து வீரர் ஜர்கோ நிமைன் - அவுஸ்ரேலிய வீரர் பெர்னர்ட் டொமிக் மோதினர்.

இதில் ஜர்கோ நிமைன் 28 நிமிடத்தில் வெற்றி பெற்றார். 6-0, 6-1 என்ற நேர்செட் கணக்கில் டொமிக்கை வீழ்த்தினார். ஏ.டி.பி. ரென்னிஸில் இந்த ஆட்டம் தான் குறைந்த நேரத்தில் முடிந்த ஆட்டம் ஆகும். குறைந்த நேரத்தில் வெற்றி பெற்ற வீரர் என்ற பெருமையை ஜர்கோ நிமைன் பெற்றார்.

# கிளிநொச்சி கைதுகள் தொடர்பில் ஜெனிவாவில் அரசின் விளக்கம்

**தி**ருமதி பாலேந்திரன் ஜெயகுமாரி மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான அருட்தந்தை பிரவீன் மற்றும் ருக்கி பெர்னாண்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டமை



குறித்து ஜெனிவாவில் உள்ள ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதரகம் 18-03-2014 அன்று விரிவான அறிக்கை ஒன்றை ஜெனிவாவில் உள்ள பல நாடுகளின் தூதரகங்களுக்கும், பல்வேறு சர்வதேச அமைப்புக்களுக்கும் வழங்கியிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருமதி பாலேந்திரன் ஜெயகுமாரியின் கைது மற்றும் தடுப்புக் காவல் சம்பந்தமாக தவறான புரிந்து கொள்ளல் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக இலங்கை அரசு பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

கோபி என்று அழைக்கப்படும் செல்வநாயகம் வெளிநாட்டிலிருந்து விட்டு நாடு திரும்பி, சுவிட்ஸர்லாந்தில் வசிக்கும் சிலர் உட்பட குறிப்பிட்ட புலிகளின் செயற்பாட்டாளர்களோடு இணைந்து புலிகள் இயக்கத்தை புத்துயிர்க்கச் செய்யும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்பவும், உள்ளூரில் வேலையற்றிருக்கும் இளைஞர்களைத் திரட்டி பயங்கர வாதச் செயல்களை முன்னெடுக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதும் வடக்கு, கிழக்கிலும் கொழும்பிலும் அத்தகைய ஐம்பது பேர் ஏற்கனவே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதும் புலனாய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பிணக்கின் முடிவுக்கு முன்னர் புலிகள் ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் ஏனைய இராணுவ உபகரணங்களை மறைத்து வைத்திருந்தனர். அத்தகைய பொருட்களை மீட்டு இத்தகைய செயற்பாட்டாளர்களிடம் சேர்ப்பிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம்.

இந்த நடவடிக்கைகளை வழிநடத்தும் பிரதான நபரான கோபி என்று அழைக்கப்படும் செல்வநாயகம் தப்பி வந்துள்ளார். பல கையடக்கத் தொலைபேசிகள், தமிழீழத்துடன் தொடர்புடைய பிரசார ஆவணங்கள் உட்பட பல இராணுவ உபகரணங்கள், ஆயுதங்கள் வெடிபொருட்களை புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்தப் பொருட்களின் மீட்பை அடுத்து, கோபி என்ற அந்தப் பிரதான சந்தேகநபரின் இடம் பற்றிய துப்பைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் குழு அதனடிப்படையில் கிளிநொச்சியில் உள்ள பாலேந்திரன் ஜெயகுமாரியின் வீட்டுக்குச் சென்றனர். நடவடிக்கையின் போது கோபி பொலிஸாரை நோக்கிச் சுட்டு, சப் இன்ஸ்பெக்டரான ரட்ணகுமாரைக் காயப் படுத்தி விட்டுத் தப்பிச் சென்றார். சப் இன்ஸ்பெக்டர் இப்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பாலேந்திரன் ஜெயகுமாரியின் வீட்டில் அவரது 13 வயது மகள் பாலேந்திரன் விபூசிகா இருந்தார். ஆயுதம் தாங்கிய கோபி அந்த வீட்டிலிருந்து தப்பிச் சென்றமையால் அந்த வீடு சோதனையிடப்பட்டது. அந்த வீட்டிலிருந்து "எவ்-3" ரக குண்டு கண்டுபிடிக்கும் கருவி ஒன்று மீட்கப்பட்டது. கோபி தொடர்பாக மேலதிக தகவல்களை தர ஜெயகுமாரி முன்வராமையினால், விடுதலைப் புலிகளை மீள ஒழுங்கமைக்கும் கோபியின் செயற்பாடுகளுக்கு உதவி, ஒத்துழைக்கின்றார் என்ற சந்தேகத்தில் அவர் கைது செய்யப்பட்டார். தனது 13 வயது மகளை ஒப்படைப்பதற்குச் சரியான பொறுப்பாளரையோ, உறவினரையோ பாலேந்திரன் ஜெயகுமாரி தரமுடியாத நிலையில் இருந்ததால் தாயுடன் அவரும் அழைத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மகளை உறவினர் அல்லது பொறுப்பாளரிடம் ஒப்படைக்கவோ அல்லது சிறுவர் பாதுகாப்பு மையத்திலோ அல்லது தாயுடன் பூஸா தடுப்பு முகாமிலோ இருக்கவோ அனுமதிக்கலாம் என நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்ற உத்தரவுப்படி விபூசிகா இப்போது சிறுவர் நன்னடத்தை பராமரிப்பில் உள்ளார். மேற்படி கைது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பூஸா முகாமில் உள்ள கைதிகளை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு சந்திக்க முடியும் என்பதும் கவனிக்கத்தக்கது.

எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் பங்குபற்றிய சிறுமி ஒருவர் கைது செய்யப்பட்டார் என்பது போல இந்த வழக்கை வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் பிழையாக அர்த்தப்படுத்தியமை கவலைக்குரியது. எந்தச் சட்டத்திலும் விபூசிகா கைது செய்யப்படவில்லை. தாயாரின் வற்புறுத்தலின் பேரிலேயே விபூசிகாவும் அவருடன் கூட்டிச் செல்லப்பட்டு நீதவானின் முன்னால் ஆஜர்படுத்தப்பட்டு பாதுகாப்பு உத்தரவு பெறப்பட்டது. இலங்கையின் சட்டத்தை நிலைநிறுத்தும் அதிகாரிகளின் இந்த நடவடிக்கை நாட்டின் சட்டத்துக்கு அமைவாக உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தாராளமாக ஜெனிவாவுக்கு வருகை தந்து இந்த அமர்வின் போது அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதி போல தனது பக்கக் கதைகளை முன்வைக்கக்கூடியதாக இருக்கின்றமை இலங்கையின் ஜனநாயகத்தின் நன்மைகளை அவரால் அனுபவிக்க முடிகின்றது என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

பயங்கரவாதம் காரணமாக மூன்று தசாப்தங்கள் கழிந்து இப்போதுதான் மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனினால் ஜனநாயகத் தொடர் செயற்பாட்டில் இப்படி பங்காளியாக முடிந்திருக்கின்றது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. தனது கணவனின் நட்வடிக்கைகள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நெருக்கமாகப் பழகிய காரணத்தால் அவர் தெரிவு செய்யும் வார்த்தைகளின் பிரயோகம் கூட புலிகளின் இலக்கையே வெளிப்படுத்துவதாக உள்ளது. உதாரணமாக, அவர் தமது பிரதேச பிள்ளைகளைப் பற்றி ஓர் அறிக்கையில் குறிப்பிடும் போது "ஈழத்தமிழ்ப் பிள்ளைகள்" என்று கூறுகிறார். தமது முப்பது வருட இரத்தக்களரி யுத்தத்தின் மூலம் இனத்துவத் தனிநாடு ஒன்றை அமைக்க முற்பட்ட புலிகள் அதற்கு இட்ட பெயர்தான் "ஈழம்" என்பது கவுன்ஸிலுக்கு ஏற்கனவே தெரிந்த விடயம் தான். அவர் தமது கணவர் எழிலன் அரசியல் தலைவர் என்று கூறுவது தவறானது. எழிலன் முக்கிய புலிப் பயங்கரவாதி. சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தமை உட்பட பல பயங்கரவாதச் செயல்களுக்குப் பொறுப்பானவர் என்று கருதப்படுபவர்.

2014 மார்ச் 11 ஆம் திகதி விஸ்வமடுவில் ஆயுதங்கள் மீட்கப்பட்டமை, கோபி தொடர்பாக 2014 மார்ச் 13 ஆம் திகதி தர்மபுரத்தில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஆகியவை உட்பட விடுதலைப் புலிகள் அமைப்பை மீள இயங்கச் செய்வது தொடர்பான செயற்பாட்டாளர்கள் குறித்து நடைபெறும் புலனாய்வுடன் சம்பந்தப்பட்டே ருக்கி பெர்னாண்டோவுக்கும் அருட்தந்தை பிரவீனுக்கும் 2014 மார்ச் 16 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் போக்குகள் தேசியப் பாதுகாப்புக்காக மேற்படி பயங்கரவாதக் குழுக்களின் எச்சங்கள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. மூன்று தசாப்த காலப் பயங்கரவாதத்தினால் நாட்டு மக்கள் எதிர்கொண்ட கணக்கற்ற துன்ப துயரங்கள் மற்றும் சிந்திய இரத்தக்களரி ஆகியவை காரணமாக அது மீண்டும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதில் அதிக கண்டிப்பை அரசு காட்டவேண்டியுள்ளது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# மனம் களைத்தால் தூக்கம் வராது!

**ம**னிதனின் அடிப்படைத் தேவைகளில் தூக்கத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். நாம் உண்ணும் உணவு சமிபாடடைந்து உடலில் சேர்வதற்கும், உடலில் வளர்சிதை மாற்றங்கள் நடைபெறுவதற்கும் தூக்கம் அவசியம். சரியாகத் தூங்காவிட்டால் ஹோமோன்களின் செயற்பாடுகளில் குறைபாடு ஏற்படும். நீரிழிவு நோய், தைரோய்ட் பிரச்சினைகள் ஏற்படும்.

பிறந்த குழந்தை 16 - 20 மணி நேரங்கள் வரை தூங்கும். வயது வந்தவர்கள் 8 மணி நேரம் தூங்க வேண்டும். அவ்வளவு நேரம் தூங்க முடியாதவர்கள், குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது தூங்க வேண்டும்.

சிலர் தூங்குவதற்கு முன்பு தேநீர், கோப்பி அருந்துவார்கள். தேநீர், கோப்பியால் நரம்புகள் தூண்டப்படுவதால் தூக்கம் வராது. சிலர் வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு உடனே படுக்கப் போவார்கள். வயிறு சமிபாட்டு வேலையைச் செய்து கொண்டிருக்கும் போது ஆழ்ந்த உறக்கம் வராது. எப்போது பார்த்தாலும் எதையாவது யோசித்துக் கொண்டு மனதுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு எல்லாம் தூக்கம் கண்களைத் தழுவாமல் நழுவி விடும். உடல் களைத்தால் தூக்கம் வரும். மனம் களைத்தால் தூக்கம் வராது.

இரவு உணவை சாப்பிட்டு முடித்து 1 மணி நேரம் கழித்து, அன்றைய நாளின் பகல் நேர பிரச்சினைகள், நெருக்கடிகளில் இருந்து மனதை மீட்டு, நல்ல காற்றோட்டம் உள்ள அறையில் படுத்தால்... உடனே தூங்கிவிடலாம்.





# குஷ்வந்த் சிங்

- சுரேஷ் கண்ணன் -

**பொ**துவாக எந்தவொரு மறைவுச் செய்தியை கேட்டாலும் துக்கமாக இருப்பது போன்று பாவனை செய்வது மரபு. மிகையாக இருந்தாலும் அழுகை வருவது போல் நடிக்க முயல்வது கூடுதல் பலனைத் தரும். இவ்வாறான பாசாங்குகளின் இடையே அபூர்வமாக சிலரின் மரணம் உண்மையாகவே வருத்தத்தை ஏற்படுத்தி விடும். அந்த அளவிற்கு அவரை நமக்குப் பிடித்திருக்கும்.

அப்படிப்பட்ட ஒருவராக குஷ்வந்த் சிங் இருந்தாலும் அவரின் மரணம் எனக்கு ஒரு துளி கூட வருத்தத்தை ஏற்படுத்தவில்லை. ஏனெனில், வாழ்க்கையை ஒரு கொண்டாட்டமாக கோலாகலமாக வாழ்ந்து தீர்த்தவர் அவர். துயரம், அழுகை போன்ற பாவனைகள் அவருடைய ஆளுமையோடு பொருந்தவே பொருந்தாது.

இந்தியர்களுக்கு பொதுவாகவே நகைச் சுவையுணர்வு குறைச்சல். அதிலும் சுயஎள்ளல் என்பதெல்லாம் நினைத்தே பார்க்க முடியாத விஷயம். உயர்தரமான, பாசாங்கற்ற நகைச்சுவை என்பது குஷ்வந்த் சிங்கின் பிரத்யேக அடையாளம். பிரபல அரசியல்வாதிகள், நடிகைகள் முதற்கொண்டு எவரும் அவருடைய எள்ளல்களிலிருந்து தப்பவில்லை. இதற்காக யாரும் அவரை கோபிக்கவில்லை என்பதே அவரின் சிறப்பான நகைச்சுவை எழுத்தின் தரத்திற்குச் சான்று.

**குஷ்வந்த் சிங்கின் மரணத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துகள்.**

# ஈழத்து இளையவர்களின் கதைகள்

# ‘திசைகாட்டி மரம்’

வடலி பதிப்பகம் 10 இளைய படைப்பாளிகளின் சிறுகதைகளைத் தொகுத்து “திசைகாட்டி மரம்” என ஒரு புதிய புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன், வடலியும் தினக்குரல் பத்திரிகையும் இணைந்து இளைய படைப்பாளிகளை ஊக்குவிக்கும் விதமாக ஒரு போட்டியை நடத்தியிருந்தன. அந்தப் போட்டியில் தேர்வாகிப் பரிசைப் பெற்ற கதைகளில் 13 கதைகளே இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. இதில் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த படைப்பாளிகளும் பங்குபற்றியிருக்கிறார்கள்.

முதல் கதையை யாழ்ப்பாணம் அளவெட்டி வே.சிவராஜா எழுதியிருக்கிறார். அளவெட்டி பல தரமான படைப்பாளிகளைத் தமிழ் இலக்கியத்திற்கும் கலைக்கும் தந்த பிரதேசம். அ.செ.மு, மஹாகவி, அ.ந.கந்தசாமி, சேரன், ஔவை, க.ஆதவன், அ. ரவி, நா. சபேசன் என்று நீண்டு தவில்மேதை தட்சணாமூர்த்தி வரை இந்தச் செழிப்புண்டு. அளவெட்டியின் மரவள்ளிக் கிழங்கும் அருமை. அளவெட்டியின் கதைகளும் கவிதைகளும் அருமை என்று சொல்வதுண்டு. அது உண்மைதான் என்பதைப்போல இந்தக் கதையையும் எழுதியிருக்கிறார் சிவராஜா.

முன்னாள் போராளி ஒருவரின் தற்போதைய நிலையைப்பற்றியது சிவராஜாவின் “இனியும் முட்செடிகள் முளைக்கும்” என்ற கதை. தன்னுடைய காலத்தில் நடந்த அரசியல் மாற்றங்கள் தந்த அனுபவங்களின் வழியாக அவருக்குள் எப்படிப் புதிய பார்வையை ஏற்படுத்துகின்றன என்பதை சிவராஜா விளக்குகிறார். பொதுவாகத் தமிழ்ச் சூழலில் காண்பிக்கப்படும் தோற்றத்தை மறுதலித்து உண்மை நிலைவரத்தைப் பேசுகிறது கதை.

அதாவது, ஒரு புனைவுப் படைப்பு யதார்த்தத்தையும் உண்மையையும் நேர்மையாகச் சொல்கிறது. ஆனால், புனைவற்ற ஏனைய எழுத்துகள் பெரும்புனைவுகளை உருவாக்கி நமது வெளியில் கூச்சமில்லாமல் பரப்புகின்றன என்று அப்படியே தெரிகின்றது. இது நாங்கள் இன்று கவனித்து விவாதிக்க வேண்டிய ஒரு விடயம்.

அடுத்த கதை பா. நீதுஜன் எழுதிய “வெறி”. தமிழர்களிடத்தில் பல வெறிகள் உண்டு. அதிலொன்று சாதி வெறி. இந்த வெறி யாழ்ப்பாணத்தமிழரின் பெருமைக்குரிய அடையாளங்களில் ஒன்று. போராட்டமும் போரும் பல்வேறு வகையான அரசியல் இயக்கங்களும் வந்து போயிருந்தாலும் இந்தச் சாதி வெறி மட்டும் போகவேயில்லை என்று சொல்லும் இந்தக் கதை கவனத்திற்குரிய ஒன்று.

இந்தக் கதையில் வரும் இளையதலைமுறைப் பாத்திரங்களின் மனதில் சாதி வேறுபாடு எப்படித் துல்லியமாக இடம்பெறுகிறது, அது யாழ்ப்பாணத்துக்கு அப்பால் கொழும்பில் கூட எப்படி நுட்பமாக இயங்குகின்றது, ஒரு பரம்பரை வியாதியாகத் தொடர்கிறது என்பதை பா.நீதுஜன் சொல்கிறார்.




வவுனியாவைச் சேர்ந்த தர்மினி பத்மநாதன் எழுதிய “விபச்சாரி”. போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் எப்படி இன்றைய நிலையில் தவறவேண்டியிருக்கிறது என்பதைச் சொல்கிறது. அநுராதபுரம் மு.கா. நஜிமுதீனின் “எச்சங்களும் மிச்சங்களும்” முஸ்லிம், சிங்கள, தமிழ்ச் சமூகங்களை மையப்படுத்தி சமகால நிலவரங்களைப் பேசும் கதை.

மட்டக்களப்பு ஹரண்யா சண்முகநாதனின் கதை, “பைத்தியக்காரியா நான்?”. அமைதியான குடும்பச் சூழலில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் இளம் பெண் சந்திக்கும் வெளிச் சூழலைப்பற்றிய கதை. சகமாணவிகள் புதிய காலச்சூழலில் எப்படி வாழ்கின்றார்கள் என்பதையும் அவர்களுடன் ஒத்திசைய முடியாமல் தவிக்கும் நிலையையும் வெளிப்படுத்த முயற்சிக்கிறார், ஹரண்யா. பண்பாட்டுச் சிதைவா நாகரிகமா என்ற நீடித்த குழப்பமே இந்தக் கதையின் கரு.

இப்படியே ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கவனக்குவிப்பைக் கோருகின்றன. தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டமும் போரும் பல மாற்றங்களை உண்டாக்கியிருக்கின்றன என்று சொல்வோரை இந்தக் கதைகள் ஒவ்வொன்றும் நகைக்கின்றன.

இந்தத் தொகுதியில் மேலும் எஸ். அதிரனின் “மூத்தமாப்பிளை”, ஸ்கந்தவாணி ஸ்ரீதரின் “மனிதம்”, த.செல்வகுமாரின் “கைபேசி”, கே.எல்.முகமது நப்லாஸின் “மனசு பேசுது”, ஆர். சிறினிவாஸ் பிரபுவின் “திசைகாட்டி மரம”, சரண்யா செல்வரூபனின் “அம்மம்மா சொன்னகதை”, எம்.எல். பாத்திமா பர்சானாவின் “திருந்திய உள்ளங்கள்”, சிவபாதம் சஜீகரனின் “குறும்புக்காரப் பெண்” என ஒவ்வொருவரின் கதைகளும் சமகால இலங்கைச் சமூகங்களின் உண்மைப் புலத்தைத் திறந்து காட்டுகின்றன.

பொதுவாகவே பெரும்பாலான ஈழத்துச் சிறுகதைகளில் காணப்படும் பிரச்சினைகளைப் பேசுவதற்காக இலக்கியத்தைப் பயன்படுத்தும் இயல்பை இந்தக்கதைகளும் கொண்டிருக்கின்றன. இளைய த்லைமுறையினரும் இந்த இயல்பிற்கு இசைவாக்கம் பெற்றேயிருக்கிறார்கள். இதனால், இந்தக் கதைகளில் இலக்கியம் என்பதற்கு அப்பாலான சமூக ஆவணமாக்கல், சமூக விமர்சனம் என்ற அம்சங்களே மேலோங்கியிருக்கின்றன. இப்படி அமையும்போது கதைகளின் கலையழகு குறைந்து இவை பேசமுனையும் அரசியல் - சமூகவியற் பிரச்சினைகளைப் பற்றிய கருத்துகளே மேலெழுகின்றன. இது ஈழப்படைப்பிலக்கியம் விரிவும் ஆழமும் பெறுவதற்குத் தடையானது. எனினும் பயனற்ற புலங்களில் தம் கவனத்தைச் சிதைக்கும் இளைய தலைமுறையினரின் மத்தியில் இத்தனை சமூகக் கரிசனையோடு இலக்கியத்தில் நாட்டம் கொண்டிருக்கும் இந்த இளையவர்கள் மதிப்பிற்குரியவர்களே.

இந்தக் கதைகளை ஒவ்வொருவரும் படித்தறிய வேணும். ஏனென்றால், இது நம் இளைய தலைமுறையின் உணர்தல்களும் அவதானங்களும் சாட்சியங்களும் விமர்சனங்களுமாகும்.

## குறிப்பு:

**தினமுரசு நாளிதழில் உங்கள் நூல்களுக்கான விமர்சனமும் அறிமுகக் குறிப்பும் வெளியாவதற்கு, நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள்.**

# காந்தி குல்லாய்!



இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அணியும் பல தலைப்பாகைகளைப் பற்றி சிந்திக்கலானேன். நம் உஷ்ண தேசத்தில், தலையின் மீது ஏதேனும் இருக்க வேண்டியது அவசியமே! வங்காளிகளும், தென்னக பிராமணர்களில் சிலரும் வெறுந்தலையாக இருந்த போதிலும், பெரும்பாலானோரான இந்தியர்கள், தலையின் மீது, ஏதேனும் அணியத்தான் செய்கின்றனர்.

பஞ்சாபி தலைப்பாகை அழகாக இருந்த போதும், அதற்கு அதிகத் துணி தேவைப்படுகிறது. மேலும், “பக்டி” வியர்வையில் ஊறி, அசுத்தமாகி விடுகிறது.

குஜராத்திகள் அணியும் கூர்மையான மங்களூர் தொப்பிகள் பார்வைக்கு நன்றாக இல்லை. மகாராஷ்டிரத்தில், ஹங்கேரியன் தொப்பிகள், அதை விட நன்றாக இருந்த போதிலும், அவை தோலால் செய்யப்படுகின்றன. ஐக்கிய மாகாணத்திலும், பீகாரிலும் வழங்கும் மெல்லிய தொப்பிகள், தொப்பிகளே அல்ல; அவை, அழகாகவும் இல்லை.

இவை எல்லாவற்றையும் பற்றி ஆலோசித்ததில், இது நன்றாக இருப்பது தெரிய வந்தது. இது அழகாகவும், கைக்கு லேசாகவும் இருப்பதோடு, தயாரிப்பது சுலபமாகவும், துணியில் தைப்பது என்பதால், பெட்டிக்குள் வைக்கக் கூடியதாகவும் உள்ளது.

காஷ்மீர் தொப்பி, கம்பளத்தில் செய்யப்படுகிறது. நான், அதைப் பருத்தித் துணியில் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். பிறகு, நிறத்தைப் பற்றி ஆலோசித்தேன். எந்த நிறமாக இருந்தால், தலைக்கு எடுப்பாய் இருக்கும் என்று எண்ணிப் பார்த்ததில், ஒரு நிறமும், பிடிக்காமையால், கடைசியாக, வெள்ளை நிறமே எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்ததென்று எண்ணினேன். அதில், வியர்வை பட்டால் தெரியும், உடனே அதை கையால் துவைத்து விடலாம்; துவைப்பதும் சுலபமாக இருந்தது.

**- காந்தி ஒரு கட்டுரையில்**

# தத்து மிருகங்கள்!

ஓரளவு வேடிக்கையான செய்திதான். ஆனால் கொஞ்சம் சோகமும் கலந்தது. நகரப் பகுதிகளில் பிராணிகளை வளர்ப்பது நம் நாட்டைப் பொறுத்தவரையில் பெரிதாகத் தடைசெய்யப்படவில்லை. கொழும்பில் கூட மாடு, கோழி, நாய், பூனை வளர்ப்பவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, மனிதர்களுக்குக் கூட நடமாட முடியாத அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் உண்டு; நாய்களுக்கு கிடையாது. எந்தத் தெருவிலும் சுதந்திரமாக நடமாடுபவை நாய்களும் மாடுகளும்.

ஆனால் நகர மைய வாழ்வையே பெரிதும் கொண்டதாகி வரும் மேற்கு நாடுகளில் அப்படி அல்ல. மேற்கில் மிருக வளர்ப்பு என்பது அனேகமாக எல்லா நகரங்களிலுமே தடை செய்யப்பட்டிருக்கிற ஒன்று. நாய்கள், பூனைகள் போன்ற சில வளர்ப்பு மிருகங்களுக்கு விலக்கு இருக்கும். ஆனால் அவையும் பெருமளவு நகர அனுமதி பெற்ற மிருகங்களாக இருக்க வேண்டி வரும்.

சமீபத்தில் அமெரிக்கா போன்ற நாடுகளில் ஓரளவு இந்தத் தடைகள் விலகி வருகின்றன. பலர் பலவித முன்னாள் கிராமத்து குடியானவ வாழ்வுக்குத் திரும்ப விரும்புகிறார்கள். அவர்கள் தாங்கள் வசிக்கும் நகர்ப்புற வீடுகளிலும் கோழி வளர்ப்பை மேற்கொள்ள முனைகிறார்கள்.

இதில் ஒரு சிக்கல். நகரங்களில் சேவல்கள் சூரிய உதயத்தில் கூரைமீதேறியோ, அல்லது இருக்கும் இடத்திலிருந்தோ கூவுவது என்பது தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதால் அவர்களால் சேவல்களை வளர்க்க முடிவதில்லை. என்னென்ன பிரச்சினைகள் வாழ்வில் வருகின்றன பாருங்கள்!

இப்படிப் பட்ட சேவல்கள் நகரக்“குடியானவர்களால்” மிருகக் காப்பகங்களில் கொண்டு விடப்படுகின்றனவாம். அவற்றை கிராமப் புறத்து மக்களுக்கு அவர்கள் தத்து மிருகங்களாகக் கொடுக்கிறார்கள். அவை கொல்லப்படக் கூடாது என்பது நிபந்தனை, ஒப்பந்தம் கையெழுத்தான பிறகே அவை கொடுக்கப் படுகின்றன.

இந்தத் தத்து மிருகங்கள் தம் வாழ்வுக்கு ஒரு புது அர்த்தத்தைக் கொண்டு வந்திருப்பதாக அகமகிழ்ந்து போகிறார்கள் இந்த தத்து வளர்ப்பாளர்கள்.



# கணித பாட அடைவை உயர்த்துவதற்கு வடமராட்சி வலயத்தால் விசேட செயற்றிட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வலயப்பாடசாலைகளிலிருந்து 2014ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சைக்குத்தோற்றும் சகல மாணவர்களையும் கணிதபாடத்தில் சித்தியடையவைப்பதற்கான விசேட கணித பாடசெயற்றிட்டமொன்றை வடமராட்சி வலயக்கல்வியலுவலகம் நடைமுறைப்படுத்திவருகின்றது.

இவ்வலயப்பாடசாலைகளின் மாணவிகளின் கணிதபாட நிலை பற்றி ஆய்வுகளை மேற்கொண்ட வலயக்கல்வி அலுவலகம 900 மாணவர்கள் கணித பாடத்தில் பின்தங்கியிருப்பதைக் கண்டுபிடித்தது. இதனையடுத்தே இவ் விசேட கணித பாட செயற்றிட்டத்தைச் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இவ்விசேட கணித பாடச் செயற்றிட்ட வகுப்புக்கள் தலைசிறந்த கணித வளவாளர்களினால் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பருத்தித்துறை கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று கோட்ங்களிலுமுள்ள ஐந்து பாடசாலைகளில் பிரதி செவ்வாய் வியாழக்கிழமைகளில் பி.ப. 3.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை நடாத்தப்பட்டு வருகின்றன.

இப்புதிய விசேட கணித பாடச்செயற்றிட்டத்தின் மூலம் உரிய இலக்கை வடமராட்சி வலயம், அடையும் என வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தெரிவித்துள்ளார். (01)



வடமாகாண விவசாய அமைச்சினால் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக புத்தூர் பகுதியில் இளைஞர்களினால் பார்த்தீனிய ஒழிப்பு இடம்பெறுவதைக் காணலாம். (48)

## கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேச சிவில் பாதுகாப்புக்குழுக்கூட்டம் இன்று காலை 8 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் வடபிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பூஜித ஜெயசுந்தர தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் உள்ள சிவில் பாதுகாப்பு பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (109)

## குளிர்த்தி அபிஷேகம்

(வடமராட்சி)

புலோலி மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மு.ப. 11.30 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து மூலஸ்தான பூசைகள் நடைபெறும்.

குளிர்த்தி அபிஷேகத்துக்கான ஏற்பாடுகளை மந்திகை வர்த்தகர்களும் பொதுமக்களும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (109)

## நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

இலங்கை பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்க வருடாந்தப்பொதுக்கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கே.கதிரமலை தலைமையில் நடைபெற்றது.

இவ் வருடாந்த பொதுக்கூட்டத்திலே பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இலங்கை பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ். மாவட்டத்தலைவர் வி. ஸ்ரீசக்திவேல், செயலாளர் பி. மகேந்திரநாதன், பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ். கிருபாகரன நிர்வாக உத்தியோகத்தர் வி. சிவகுமாரன், நிதிஉதவியாளர் திருமதி ஆர். சிவராணி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். இவ்வாண்டிற்கான நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. எஸ். திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார். (01)

# எல்லாள காவியமும் அதை இயற்றிய புலவனும்



வரலாறுகள் மாற்றப்பட்டு புனைவுகள் வரலாறுகளாகப் பதியப்பெறுவது இன்று வாடிக்கையாகிப் போயுள்ளது. இப்போது வெளியிடப்படும் எல்லாள காவியம என்னும் நூல் இலங்கை வரலாற்று முக்கியத்துவம் கொண்டமாமன்னன் எல்லாளனைப் பற்றியதாகும்.

நாற்பத்துநான்கு ஆண்டுகள் இலங்கை மண்ணில் செங்கோலோச்சிய இம் மன்னனின் வரலாற்றை மறைத்தடிக்க முயலும் காலகட்டத்தில் அவனது கீர்த்தியையும்,வீரவரலாற்றையும் 1464 செய்யுட்களில் பேசுவதாகும்.

எல்லாளனின் இளமைப் பருவந்தொட்டு வஞ்சனையால் அவன் கொல்லப்படும் வரையிலான நிகழ்வுகள் பாடல்களில் பதிவாகியுள்ளன.

மரபுவழிச் செய்யுள்களின் ஆதிக்கம் மழுங்கடிக்கப்பட்டு, நவீன கவிதைகளின் ஆதிக்கம் ஓங்கியிருக்கும் இன்றைய நாளில்,வரலாற்றுச் சான்றுகளுடன் கூடி நாவலாசிரியர் செங்கைஆழியான் அவர்களால் எழுதப்பெற்ற 'ஈழராஜா எல்லாளன்' என்ற புதினத்தை மூலக்கருவாக வரித்து காவியத்திற்கான வரன்முறைகள் பெரிதும் பேணி, பல்வகைப்பட்ட சந்தங்களில், கற்பனைவளங் கூட்டி படைக்கப் பெற்றுள்ளது இக்காவியம்.

நாவலில் பேசப்படாத எல்லாளன் திருமணம், தனிச்சமர், இயற்கை அனர்த்தம்,கேசாதிபாதவர்ணனைகள், போன்ற பல புதிய அலங்காரங்களும் இக்காவியத்திற்கு மெருகூட்டவெனச் சேர்க்கப் பட்டுள்ளன.

இலக்கியத்தின் இன்பநுகர்வுக்கு ஏற்றபடி, சந்தர்ப்பங்களுக்குஉகந்தவாறு கூடியுள்ள வர்ணனைகள் புலவனின் கவிதத்துவ ஆளுமையை காட்டுவன. விருத்தம் புலவருக்கு எளிதாகக் கைவரப் படுவதால் பல்வகை விகற்பங்களோடுக விதைகள் இலகுவாய்ப் புரியும் மொழி நடையில் ஓசைகுன்றாது யாக்கப்பட்டுள்ளன.

வடமாகாண முதலமைச்சரின் ஆசிச் செய்தியுடன். தந்தையாரின் ஆசிப்பாவும், ஞானத்தந்தை எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் பொதுப்பாயிரமும், பன்மொழிப் புலவர் சோ.பத்மநாதன் அவர்களின் சிறப்புப் பாயிரமும் காவியத்திற்குச் அணிசெய்கின்றன.

அட்டைப்பட ஓவியத்தை பிரபல ஓவியர் ஆசை இராசையா அழகுறவரைந்துள்ளார். நூலின் வடிவமைப்பும்,அச்சுவண்ணமும் சிறப்பாக அமைந்துள்ளன.

எல்லாளன் காவிய நூலாசிரியர் புலவர்மணி, காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுதீன் அவரகள் புலவர்மரபு வழிவந்த இலங கையின் ஒரு மூத்தகவிஞர்.

தந்தை புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீனிடம் தமிழையும், கவிதை இயற்றும் ஞானத்தையும் பெற்ற இவர், பத்திரிகைத் துறை ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் அவர்களால் இலக்கிய உலகிற்கு அறிமுகமாகி வளர்க்கப்பெற்றவர்.

இலக்கியத் தேடல் நலிந்து, கற்பவரும் குன்றி தமிழில் காவியம் இயற்றும் ஆளுமையும் அருகிப்போயுள்ள இன்றைய காலகட்டத்தில், ஓய்வின்றித் தொடர்ந்து பத்தாயிரம் மரபுசார் கவிதைகள் கொண்டு பத்துக் காவியங்களையும் பல கவிதைத் தொகுப்புக்களையும் இவர் தமிழுக்குத் தந்துள்ளார்.

காவியங்களுக்கு உரைகாண்பதே தொன்றுதொட்டு வழிவந்தமரபு. இம்மரபினை மாற்றி உரைநடைக்குக் காவியம் செய்த முதன்மைப் படைப்பாளி இவராவர்.

இதனை 1991 இல் வெளிவந்த இவரது முதற்காவியம் 'மஹ்ஜபின்' காவியத்திற்கு அணிந்துரை அளித்த பேராசிரியர் டாக்டர் சிலம்பொலிசெல்லப்பனாரும், 1996இல் வெளிவந்த 'புனிதபூமியிலே' காவியத்திற்கு அணிந்துரை அளித்த பேராசிரியர் டாக்டர் ம.மு.உவைஸ் அவர்களும் நிரூபணம் செய்துள்ளனர்.

இவ்விரு காவியங்களையும் சங்க இலக்கியங்களுடனும், பழம்பெரும் தமிழ்க் காப்பியங்களுடனும் ஒப்பீடு செய்து 'கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு' என்னுந் தலைப்பில் நானொரு ஆய்வுநூல் செய்து மருதமுனை அன்னை வெளியிட்டகத்தின் சார்பாக வெளியிட்டேன்.

அதனைப் படித்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் தனது அணிந்துரையில் 'இந்நூல் கவிஞர் அகளங்கனின் படைப் பிலக்கியத்தில் ஒரு 'மாஸ்ட்டர் பீஸ்' என விதந்துரைசெய்துள்ளார்.

இதே காவியங்களை ஆய்வுசெய்து இந்தியப் பேராசிரியர் முகம்மதலி சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

தவிரவும் இலங்கையின் யாழ், பேராதனை, சப்ரகமுவ ஆகிய பல்கலைக் கழக மாணவியர் மூவர் இவரது காவியங்களை ஆய்வுசெய்து சிறப்புக்கலைமாணிப் பட்டம் பெற்றுள்ளனர்.

### இது ஒரு கவிஞனின் பார்வை

அத்துடன் இலங்கை, தமிழ்நாடு, பாண்டிச்சேரி பேராசிரியர்கள் இருபது பேர் இவரது காவியங்களை ஆய்வு செய்து மாநாட்டுக் கட்டுரைகளும் சமர்ப்பித்துள்ளனர்.

பெரும்பாலும் வரலாற்று நாயகர்களையே பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை இவரது காவியங்களாகும்.

தற்போது வெளியிடப்படும் ஈழத்தமிழ் மன்னன் எல்லாளன் பற்றிய காவியம் போன்றே 2005ஆம் ஆண்டில்,ஈழத்தின் வடபுலத்தை நிருவகித்த குறுநிலஅரசன் பண்டாரவன்னியன் பற்றியோர் காவியத்தையும் இவர் படைத்துள்ளார்.

இக்காவியம் இலங்கை அரசின் பொருள் உதவியுடன் பதிவு செய்யப்பட்டதுடன், அவ்வாண்டின் சாகித்யமண்டலப் பரிசில், இலங்கை இலக்கியப் பேரவை (யாழ் இலக்கியவட்டம்) பரிசில்,கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசில் என்பவற்றையும் ஒருமித்துப் பெற்றது.

படைப்பிலக்கியத்திற்காக உலகளாவியரீதியில் பல பரிசில்களைப் பெற்றுள்ள கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் இலங்கை அரசாங்க, தனியார் நிறுவனங்களாலும்,தமிழகத்திலும் வாழ்நாள் சாதனைவிருதுகளும் பட்டங்களும் பெற்றவர்.

சிறப்பாய் தமிழக இஸ்லாமிய இலக்கியக் கழகம் 'காப்பியக்கோ' பட்டத்தினையும், இலங்கையின் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 'புலவர்மணி' பட்டத்தினையும் வழங்கி இவரைக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தையார் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களும் புலவர் மணிபெரியதம்பிப்பிள்ளை அவர்களால் 'வெண்பாவில் என்னை நீவென்றாய் ஷரிபுத்தீன் நண்பா என் நாமம் நினைக் களித்தேன்' எனப் புகழப்பட்டவர்.

கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் எழுத்துத் துறையில் கால்பதித்த நான்கு தசாப்தங்களுள் இருபத்துநான்கு நூல்களைத் தழிழுக்கு வழங்கியுள்ளார்.

மும்முறை தேசிய சாகித்ய மண்டலப் பரிசிலையும், ஐந்துமுறை இலங்கை இலக்கியப் பேரவை (யாழ் இலக்கிய வட்டம்) பரிசிலையும், இரண்டுமுறை வடகிழக்குமாகாணப் பரிசிலையும், இரண்டு முறைதமிழியல் விருதினையும், இரண்டு முறைகொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசிலையும், தனது படைப்பிலக்கியங் களுக்காகப் பெற்றுள்ளார்.

தமிழகத்தில் உமறுப்புலவர் ஞாபகார்த்த விருதும் இவ்வாண்டு இவருக்கு வழங்கப்பெற்றது. இவரது நீண்டநாள் இலக்கியப் பணிக்காக கிழக்குமாகாண முதலமைச்சர் விருதினையும் இவர் பெற்றுள்ளார். அத்துடன் இலங்கைக் கலாசார அமைச்சினால் கவிக்கதிரோன், கலாபூஷணம் ஆகிய கௌரவங்களும் இவருக்குக் கிடைத்துள்ளன.

**- முனைவர் அகளங்கன்**

# வடமாகாண இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பு குறித்து ஆராய்வு



வடமாகாணத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களது கல்வித் தகைமைகளுக்கேற்ப சுயதொழில் வாய்ப்புக்களை தொழில் வழிகாட்டல்கள் மூலம் வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் இக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, யாழ்ப்பாணம் கிளிநொச்சி உள்ளிட்ட வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் வேலைவாய்ப்பு இல்லாதிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களது கல்வித் தகைமைகளுக்கேற்ப தனியார் துறைகளில் தகுந்த வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வாறு வேலைவாய்ப்பில்லாதிருக்கும் இளைஞர், யுவதிகளால் சமூகம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளுக்கு தீர்வு காணப்படும் அதே வேளை, சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபை, பனை அபிவிருத்தி சபை உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுக்கூடாக தனியார் தொழிற்துறைகளை மேம்படுத்துவது மற்றும் கிடைக்கப்பெறுகின்ற உள்ளீடுகள் ஊடாக புதிய தொழிற்துறைகளை அறிமுகப்படுத்தி நவீனப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதனிடையே குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் விசேட குழுக்களை அமைத்து அவற்றின் ஊடாக செயற்றிட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், கைத்தொழில் அபிவிருத்திசபையின் கீழ் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கைத்தொழிற்பேட்டைகள் இயங்கி வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கைத்தொழிற் பேட்டையொன்றை நிறுவி அதனூடாக வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இவ்வாறு, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்களுக்கு ஊடாக வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் வகையில், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் துறைசார்ந்தோருடன் விரைவில் கலந்துரையாடி தீர்வு காணப்படுமென அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# யாழ். பலநோக்குக்கூட்டுறவு சங்கத்திற்கு கிளைக்குழுக்களை தெரிவு செய்ய ஏற்பாடு

நீண்டகாலத்தின் பின் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கிளைகளினை புனரமைப்பதற்கான கிளைக்குழு உறுப்பினர்களினைத் தெரிவு செய்து அதன் மூலம் பொதுச்சபையினை தெரிவு செய்து புதிய இயக்குநர்சபையை தெரிவு செய்யும் நடவடிக்கைகளை கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக கிளை உறுப்பினர்களினைத் தெரிவு செய்வதற்கான கூட்டங்கள் இம்மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் ஒரே நேரத்தில் மு.ப. 10.00 மணிக்கு 31 கிளைகளுக்குமான கிளைக்குழுக்களினை அமைப்பதற்கான கூட்டங்கள் இம்பெறவுள்ளன.

இதற்கான அறிவித்தல் கடிதங்கள் கிளைகளின் அங்கத்தவர்களாக உறுப்புரிமை பெற்றவர்களுக்கு யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே அருந்தவநாதனால் சகல உறுப்புரிமை பெற்றவர்களுக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைக் குழுத்தெரிவுக்கூட்டங்கள் கிளை நிலையங்களிலும், தெரிவு செய்யப்பட்ட பொது நிலையங்களிலும் நடைபெறவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வகையில் அந்தந்த கிளைகளில் நடைபெறும் தெரிவுக்கூட்டங்கள் தவிர ஏனைய பொது இடங்களில் இடம்பெறும் கிளைக் குழுக்களின் விபரம் வருமாறு,

கிளை 3சி. முஸ்லிம் தெருவுக்கான கூட்டம் ஒஸ்மானியாக் கல்லூரியிலும், கிளை 4 ஓட்டு மடத்துக்கானது கலை வாணி ச.ச.நிலையத்திலும், கிளை 10 யாழ்.பாடிக்கான கூட்டம் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்திலும், கிளை 11 நல்லூர் வடக்கு வன்னிய சிங்க பொதுப்பணி மன்றத்திலும், கிளை 13 கைலாச பிள்ளையார் கோவிலடிக்கானது பேக்கரி உரிமையாளர் சங்கத்திலும், கிளை 14 ஆனைப்பந்திக்கான கூட்டம் ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், கிளை 16 நீராவியடிக்கான கூட்டம் யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையிலும், கிளை 18 அரியாலை மேற்குக்கானது காந்தி ச.ச.நிலையத்திலும் கிளை 21 கொழும்புத்துறை கிழக்குக்கானது துறையப்பா வித்தியாலயத்திலும், கிளை 25 ஈச்சமோட்டைக்கானது ஈச்சமோட்டை ச.ச.நிலையத்திலும், கிளை 28 ஸ்ரேசன் சந்திக்கானது புனித மரியாள் வித்தியாலயத்திலும், கிளை 31 மவுன்கார்மலுக்கானது மவுன்கார்மல் ச.ச நிலையத்திலும், கிளை 35 சின்னக்கடைக்கானது புனித யாகப்பர் ஆலய மண்டபத்திலும் இடம் பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)



யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அலுவலகத்திறப்பு விழா அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் எஸ்.கே.எழில்வேந்தன் அலுவலகத்தை திறந்துவைப்பதைக் காணலாம். (63)

# சட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தொழில்நுட்ப பயிற்சி திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமையாக பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப்பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதி மன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும். அத்துடன் இதேதுறையில் மூன்று வருட தொழில்சார் அனுபவமும் தேவை.

மேலதிக தகைமைகளாக தமிழ், ஆங்கில மொழியில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல், உள நலமுடையவராக இருத்தல் வேண்டும். 21-45 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம் தொழில்நுட்ப கல்விப் பயிற்சித்திணைக்களம். த.பெ.இல 557, ஒல்கோட் மாவத்தை கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் என்று குறிப்பிடல் அவசியமாகும். (105)

# பதிவிறக்கப் பெட்டகம்

இன்று மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கும், ரஷ்ய முதலாளிகளுக்கும் இடையில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறது உக்ரேன். இருப்பினும் இதன் முதன்மைக் குற்றவாளிகள் அமெரிக்க தலைமையிலான மேற்குலகம்தான்.

'கம்யூனிசம்தான் சைத்தான், சோவியத் யூனியனை வீழ்த்தி முதலாளித்துவ ஜனநாயகத்தை உலகெங்கிலும் நிலைநாட்டி விட்டோம், இனிமேல் ஒரே அமைதி அமைதி' என்று பாட்டுப் பாடிய முதலாளித்துவ அறிஞர்கள், இப்போது அமெரிக்கா உலகெங்கிலும் நடத்தி வரும் பொருளாதார, ராணுவ, அரசியல் ரீதியான ஜனநாயகப் படுகொலைகளுக்கு புதுப்புது விளக்கங்கள் கொடுத்து வருகின்றனர். போர்கள் இல்லாமல் வல்லரசுகள் இல்லை, அவற்றின் பொருளாதார மேலாதிக்கம் இல்லை என்பதை சோவியத் யூனியன் தகர்வுக்கு பிறகும் பார்த்து வருகிறோம்.

– வினவு

வரலாறு கால் நூற்றாண்டு பின்னோக்கிப் பயணித்தது போல இருக்கிறது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணி நாடுகளுக்கும் ரஷ்யா தலைமையிலான வோர்சோ ஒப்பந்த நாடுகளுக்கும் இடையில் நடந்த பனிப்போர் காலம் நினைவுக்கு வருகிறது. ரஷ்யாவின் வல்லாதிக்கமே கிரைமியா பிளவுக்குக் காரணம் என்றால், சோவியத் ஒன்றியம் உடைபட்டபோது அகமகிழ்ந்த அமெரிக்கா, கொசோவோ உருவானபோது அதை வெளிப்படையாக ஆதரித்த அமெரிக்கா, யூகோஸ்லேவியா பிளவைப் பின்னிருந்து ஊக்குவித்த அமெரிக்கா... இப்போது உக்ரேன் பிளவை மட்டும் எதிர்க்கக் காரணம் என்ன?

மேற்கத்திய நோக்கங்கள் உலகம் அறியாத ரகசியம் அல்ல. பொருளாதாரத் தடைகளை தொடர்ந்து அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உக்ரேனிலோ கிரைமியாவிலோ களம் இறங்கலாம் என்கிற செய்திகள் கசிகின்றன. அப்படி நடந்தால், இன்னொரு வரலாற்று இழப்புக்கு அமெரிக்கா தயாராகிறது என்றே அர்த்தம்!

– தி இந்து தலையங்கத்தில்

அல்கைதா தான் அமெரிக்கா. அமெரிக்கா தான் அல்கைதா. இதை நான் முன்பு சொன்ன பொழுது நம்ப மறுத்தவர்கள், திடீரென பல்டி அடித்து, சிரியா, கிரைமியா பிரச்சினையில் அல்கைதாவை ஆதரிக்கிறார்கள். அல்கைதா அமெரிக்காவுக்கு எதிராக போராடினால் அது பயங்கரவாதம். அதே அல்கைதா சிரியா, ரஷ்யாவுக்கு எதிராக போராடினால், அது விடுதலைப் போராட்டம். அமெரிக்க விசுவாசிகளின் நடு நிலைமை புல்லரிக்க வைக்கிறது.

– கலையரசன்.தா

உலகத்தின் ஜனநாயகத் தாரகை தானே என்று உலகரங்கில் அழக்கழ கொக்கரிக்கும் ஒரு நாடு அமெரிக்கா. அதன் அரசியலாளரும், புத்திசீவிகளும் இதையே அழக்கழ உலகரங்கில் மட்டுமல்ல, ஏராளமான ஊடகங்களிலும் பேசியும், எழுதியும் வருகிறார்கள். இந்தப் புரட்டலை உலகில் ஒரு கணிசமான எண்ணிக்கை மக்கள் நம்பவும் செய்கிறார்கள்.

அமெரிக்காவில் ஜனநாயகமே இல்லை என்றா சொல்ல வேண்டும். அப்படி இல்லை. அங்கு ஜனநாயகமும் உண்டு, ஃபாசிசமும் உண்டு, மோசமான அடக்கு முறைகளும், கிறிஸ்தவத் தீவிர வாதத்தின் வன்முறையும், பொருளோ, தர்க்கமோ அற்ற கொலைவெறி கொண்ட முறைமைகளும், பெண்ணெதிர்ப்பு நோக்குள்ள அரசியல் இயக்கங்களும் என்று என்னென்னவோ அபத்தங்களும் அற்பத்தனங்களும் நிறையவே உண்டு. இருந்தும் அங்கு எங்கெல்லாமோ ஜனநாயகமும், ஜனநாயகத்தை உயிர்ப்போடு வைத்திருக்க விரும்பும் மக்களும் நிறையவே உண்டு.

எதிரெதிர் போக்குகளின் மோதல் மிக உயர்ந்திருக்கும் ஒரு காலகட்டத்தில் அமெரிக்க அரசியல் அமைப்பு இன்று திக்குமுக்காடுகிறது. வெள்ளை இனவெறியும், பழமை வாதங்களும், கிறிஸ்தவத் தீவிர வெறித்தனமும், உலக ஏகாதிபத்தியம் தம் கரங்களிலிருந்து நழுவுகிறது என்ற பதட்டத்தில் எழும் பேதமைகளுமாக அமெரிக்க மக்களின் நடுவே பரவலாகி வரும் உரிமை விளைவுகள், சுதந்திர தாகம் ஆகியவற்றை ஒழிக்க முயன்று வருகின்றன. எது வெல்லும்? நாம் பொறுத்திருந்து பார்த்தால் மட்டும் போதாது. உயர்ந்த ஜனநாயக மரபுகள், போராட்டங்கள், இயக்கங்கள் போன்றனவற்றுக்கு வெளியிலிருந்தும் ஆதரவு தெரிவித்து, அந்நாட்டின் அரசியல் இயக்கத்தில் தலையீட்டைச் செய்யலாம். உலகின் பற்பல நாடுகளிலும் அமெரிக்க வல்லரசு தலையிட்டு அவற்றைக் கொடும்பாழில் தள்ள எத்தனை முயற்சிகளைச் செய்திருக்கிறது. அவைதானே கடந்த பல பத்தாண்டுகளில் உலகின் பல நாடுகளில் மக்கள் வாழ்வைத் துவம்சம் செய்திருக்கின்றன.

– மகரந்தம்

# ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் இலங்கைப் படைகளுக்கு இடமில்லை

## இடைநிறுத்த கோருகிறார் யஸ்மின் சூகா



ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கையர் படையணியை அப்பணிகளிலிருந்து இடை நிறுத்த வேண்டும் என்று லண்டனில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டிருக்கும் யஸ்மின் சூகா அறிக்கையில் கோரப்பட்டி ருக்கிறது.

இலங்கையின் வடக்கில் யுத்த காலத் தில இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர் பான சாட்சியங்கள் அடங்கிய அறிக் கையை பிரபல மனித உரிமைகள் சட் டத்தரணி யஸ்மின் சூகா நேற்றுமுன் தினம் வெளியிட்டார். இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனித குலத்துக்கு எதிரான குற்றங் களைப் புரிந்தமைக்கான குற்றச்சாட்டுக் களைச் சுமத்தி உரிய சட்ட நடவடிக் கைகளை எடுப்பதை வலுப்படுத்தும் விதத்திலும் பாதிக்கப்பட்ட நாற்பது பேரின் சாட்சியங்களைச் சேகரித்து, பதிவு செய்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டி ருக்கின்றது.

"முடிவுறாத யுத்தம்: இலங்கையில் சித்திரவதைகளும் பாலியல் வன்முறை களும் - மே 2009 முதல் மார்ச் 2014 வரை" என்ற தலைப்பிலான இந்த அறிக்கையை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டவாளர் அமைப்பின் மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்தவரும், இலங்கைக்கான சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தைச் சேர்ந்த வருமான மனித உரிமைகள் சட்டத்தரணி யஸ்மின் சூகா அம்மையார் தயாரித்துள் ளார்.

அந்த அறிக்கையில் திகைக்க வைக் கும் விதத்தில் அமைந்துள்ள சாட்சியங் கள், பிரிவினைவாதிகளான தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்துடன் 26 வருடங் களாக நீடித்த பிராந்தியப் பிணக்கை வெற்றி கொண்டதாக அறிவித்த பின்னரும் கூட, இராணுவம் இன்னும் தனது அடக்கு முறை நடவடிக்கைகளை கடத்தல், தன்னிச் சையான தடுப்புக் காவல், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, பாலியல் வன்முறை கள் போன்றவை மூலம் தொடருகின்றது என்பதைக் காட்டுகின்றன. இலங்கையில் துன்புறுத்தலுக்கு உள்ளாகிய பின்னர் பிரிட்டனில் தஞ்சம் அடைந்துள்ள டசினுக்கு மேற்பட்ட ஆண, பெண்களான தமிழர்க ளின் சத்தியப் பிரமாண வாக்குமூலங்க ளுமம, மருத்துவ மற்றும் உளவள சோதனை ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் எல்லாச் சம்பவங்களும் யுத்தத்தின் பின்னர் இடம்பெற்றவை. அவற் றில் சில அண்மையில் 2014 பெப்ரவரி யில் இடம்பெற்றவை. இவர்களின் நம்பத் தகுந்த அனுபவங்கள் மேற்கு மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த சுயாதீன சட்டத் தரணிகள் மூலம் ஆவணப் படுத்தப்பட்டுள ளன. அவை, சித்திரவதை, பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் கொடுமை களுடன் இலங்கை இராணுவத்தைத் தொடர்புபடுத்தி, அவர்களுக்கு எதிராக யுத்தத்தின் பின்னரான காலத்திலும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தவர்கள் என்று வழக்குத் தொடர்ந்து நிரூபித்து, பதில் கோரப் போதுமானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய துஷ்பிரயோகங்களுக் கான சுயாதீன விசாரணை நிலுவையில் இருப்பதால் சர்வதேச அமைதி பேணும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இலங கைப் பொலிஸ் மற்றும் இராணுவத்தி னரை அப்பணியிலிருந்து ஐ.நா.இடை நிறுத்தி வைப்பதுடன், இலங்கையுட னான தமது தொடர்புகளை மீளாய்வு செய்யும்படி நாடுகளையும் கோரவேண் டும் என்றும் அவர்கள் வேண்டியுள்ளனர்.

அரசியல் தஞ்சம் வழங்குவது தொடர் பான கொள்கைகள், சர்வதேச நிதி உதவி வழங்கும் முறைமைகள் ஆகிய வற்றிலும் ஒட்டு மொத்தமாக சர்வதேச சமூகத்திலும் இந்த அறிக்கை உடனடி யாக தாக்க விளைவுகளை ஏற்படுத்தும்" என்றும் யஸ்மின் சூகா தெரிவித்தார்.

தங்களுடைய அனுபவங்களை இப் படி மீள ஒப்புவிப்பது, இத்தகைய குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வர வழி செய்யும் என்ற நம்பிக்கையிலேயே என சாட்சியமளித்த ஒவ்வொருவரும் தெரி வித்தனர் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# சிலி ஜனாதிபதிக்கு மகிந்த வாழ்த்து

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர் தல்களில் வெற்றி பெற்று ஜனாதிபதியா கத் தெரிவுசெய்யப்பட்டு, கடந்த வாரம் பதவியேற்ற சிலி நாட்டின் புதிய ஜனா திபதி மிச்சேல் பெச்சலெட்டுக்கு ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

நீங்கள் இரண்டாம் முறையாகவும் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப் பது சிலி மக்கள் உங்கள் மீது வைத் துள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுவ தாய் உள்ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அச்செய்தியில் குறிப்பிட்டுள் ளார்.

உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் சிலி சுபீட்சம் மற்றும் அபிவிருத்தியை நோக்கி மேலும் முன்னேற்றமடையும் என நான் நம்புகின்றேன் என்றும் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள் ளார்.

# உள்ளக ஒருமைப்பாடு இருந்தால் அமெரிக்கா சொல்வதைக் கேட்கத் தேவையில்லை

## ரணில் அரசுக்கு போதனை



(கொழும்பு)

உள்நாட்டில் ஒருமைப்பாடு இருந்தால் சர்வதேசம் எம்மை எதுவும் செய்ய முடியாது. அமெரிக்கா சொல்வதை நாம் கேட்கவும் தேவையில்லை என்றும் இதற்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடை முறைப்படுத்துவதன் மூலம் சர்வதேச நாடுகளுக்கு பதில் கூறமுடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட் டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க எதிர்க்கட்சி துபாராகஷ்ஷது எனினும், இதற்கு முன் னதாக அர சாங்கம் தமது பங்கை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

அமெரிக்கா கூறுவதை கேட்க வேண் டும் என்றோ அல்லது பிரித்தானியாவின் பிரதம மந்திரி டேவிட் கமரூன் கூறு வதைக் கேட்கவேண்டும் என்றோ தாம் கூறவில்லை.

எனினும், இந்த நாட்டு மக்கள் கூறு கின்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடை முறைப்படுத்த வேண்டும்.

இதன்போது அமெரிக்காவோ, அல் லது வேறு எந்த நாடுகளோ குற்றங் களைச் சுமத்த முடியாது.

இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்து வதுடன் 17 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதன்போது, எதிர்க்கட்சியான தாம், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்து வது மட்டும் அன்றி, ஏனைய எதிர்க்கட்சி களும் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என கோர முடியும்.

இதன்போது எட்டப்படும் இணக் கத்தை சர்வதேசத்திற்கு கொண்டு சென்று அங்கு இலங்கையுடன், இணக்கத்துடன் இணைந்து செயற்படு மாறும் கோரமுடியும் என ரணில் விக்கிரம சிங்க குறிப்பிட்டார்.

# பங்குச்சந்தையில் மாணவர்கள்; ஊக்குவிக்க செயற்றிட்டம்

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்வோர் மத்தியில் மூலதனச் சந்தை தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க கொழும்பு பங்குச்சந்தை மற்றும் கல்வி அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 13,000 ஆசிரியர்களுக்கும் மற்றும் 15,000 பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் மத்தியிலும் இந்த செயற்பாட்டை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைகுழுவின் அனு மதியுடன் செயலமர்வுகளை நாடு முழு வதும் முன்னெடுக்க கொழும்பு பங்குச் சந்தை திட்டமிட்டுள்ளது.

இந்தச் செயலமர்வுகளின் போது சேமிப்பு மற்றும் முதலீடுகள், முதலீட்டு வாய்ப்புகள், மூலதனச் சந்தை செயற் பாடுகள் மற்றும் பங்குகளில் முதலீடு களை மேற்கொள்வதன் அனுகூலங்கள் போன்ற பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

# பிரதேச செயலகம் முன்பாக மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்



சாவகச்சேரி நகர சபை தொழிலாளர் விடுதிக்கு அப்பால், கடற்கரையை ஒட்டி, சுமார் 40 ஏக்கர் விஸ்தீரணமுள்ள உதயசூரியன் கிராமத்தில் வசிக்கும் சுமார் 300 பேர் சாவகச்சேரி பிரதேச செயலர் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப் பாட்டம் செய்தனர். தாங்கள் வசிக்கும் அரச காணிகளை தங்களுக்கு நிரந்தரமாக வழங்க வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டம் அவர்க ளால் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருடன் பிரதேச செயலர் பேச்சு நடாத்தினார். தற்போதைய சட்டங்களின் படி கடற்கரை யிலிருந்து 200 மீற்றருக்குள் வீடு கட்டி வாழ்வதற்கு உத்தியோகபூர்வ ரீதியாக அனுமதி வழங்கப்படமுடியாது என்பதை அவர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு விளக் கினார்.

எனவே கடற்கரையிலிருந்து சில மீற்றர் தொலைவில் உள்ள காணிகளை சட்டரீதியாகக் குடியிருப்புக்கு வழங்க முடியாது என்பதையும் அவர் எடுத்து ரைத்தார்.

# கிளிநொச்சி இளைஞன் மன்னாரில் வைத்து கைது

மன்னார் வங்காலைப்பாடு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த கிளி நொச்சி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கடற் படையினர் நேற்று கைது செய்து தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர்.

குறித்த இளைஞர் சிறுத்தோப்பு கிரா மத்தில் தங்கி இருந்து வங்காலைப் பாட்டில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவ தாகத் தெரியவருகின்றது.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சோதனைகளும், தேடு தல்களும் இடம்பெற்றுவரும் நிலையிலே குறித்த இளைஞர் கிளிநொச்சி கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்த காரணத்தினாலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வரு கின்றது.

தற்போது குறித்த இளைஞர் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ள நிலையில் தலைமன் னார் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக தலை மன்னார் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் அவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது.

கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த இளைஞரை மன்னார் வங்காலைப்பாட்டு கிராமத்தில் வைத்து கடற்படையினர் கைது செய்து நேற்றுமுன்தினம் தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர்.

நாங்கள் விசாரணைகளின் பின் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த ஏற்பாடு செய்யவுள்ள தாகத் தெரிவித்தார்.


● பின்வரும் கவிதையை வாசித்து 27ஆம் 28ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.


காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா

27) இக்கவிதை யாருக்காக பாடப்பட்டுள்ளது?
(i) பிள்ளைகளுக்கு (ii) வயது முதிந்தோருக்கு (iii) இளைஞர்களுக்கு

28) இங்கு கனிவு கொடுக்கும் என்று குறிக்கப்படுவது
(i) களைப்பு கொடுக்கும் (ii) பழம் கொடுக்கும் (iii) மகிழ்ச்சி கொடுக்கும்

● 1,2,3 எனத் தரப்பட்டுள்ள உருக்களில் எந்த உருவை மேலிருந்து பார்க்கும்போது முதல் உள்ள படம் கிடைக்கும்

29) 

30) 

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை வெளியான பயிற்சி வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 2 | 21) | 2 | 30) | 2 | 40) | 7 |
| 2) | 3 | 12) | 2 | 22) | 1 | 31) | 3 | | |
| 3) | 2 | 13) | 3 | 23) | 3 | 32) | 2 | | |
| 4) | 1 | 14) | 3 | 24) | 2 | 33) | 2 | | |
| 5) | 1 | 15) | 2 | 25) | அன்பு, காற்று | 34) | 3 | | |
| 6) | 3 | 16) | 1 | | அக்கா, புற்று | 35) | 3 | | |
| 7) | 3 | 17) | 2 | 26) | வித்து, தும்பி, பிறகு | 36) | 3 | | |
| 8) | 1 | 18) | 3 | 27) | 1 | 37) | 3 | | |
| 9) | 1 | 19) | 2 | 28) | 3 | 38) | பூ, ச | | |
| 10) | 2 | 20) | 3 | 29) | 1 | 39) | X | | |




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



சென்றவாரத் தொடர்ச்சி....


06) 
(i) (ii) (iii)

● 7ஆம் 8ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

07) கப்பல் செலுத்துபவன் மாலுமி போல் தேர் செலுத்துபவன் ..........................
(i) இடையன் (ii) மீகாமன் (iii) பாகன்


08) விளையாட்டு வீரனுக்கு மைதானம் போல் மாணவனுக்கு ..........................
(i) பாடசாலை (ii) வாசிகசாலை (iii) வீடு

09) உருவத்திற்கு உருவம் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



(i) 1C, 2A, 3E (ii) 1C, 2D, 3E (iii) 1H, 2D, 3B

● 10ஆம் 11ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தரவைப்பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.



| ரூ. 45.00 | ரூ. 50.00 | ரூ. 50.00 | ரூ. 65.00 | ரூ. 55.00 |
|---|---|---|---|---|

10) மிகவும் பெறுமதிகூடிய பழம் எது?
(i) பப்பாசி (ii) அன்னாசி (iii) மாம்பழம்

11) ஒரு மாம்பழத்தினதும், ஒரு பப்பாசிப்பழத்தினதும் விலை யாது?
(i) 35 ரூபா (ii) 40 ரூபா (iii) 50ரூபா

12) மாலாவுடைய வகுப்பில் 18 மாணவர்கள் உள்ளனர். எல்லோரும் ஒரு வரிசையிலேயே இருக்கின்றனர். அதில் மாலா ஆரம்பத்தில் இருந்து பத்தாவதாக இருக்கிறாள். இறுதியில் இருந்து பார்க்கும் போது மாலா எத்தனையாவதாக இருப்பாள்?
(i) 6 வதாக (ii) 9 வதாக (iii) 8 வதாக

13) ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியிலிருந்து 20 நாட்களின் பின்னர் பார்க்கும் போது திகதி யாது?
(i) மே 10 (ii) ஜூன் 16 (iii) மே 16

14) தம்பியிடமும் என்னிடமும் 700 ரூபாய் பணம் உள்ளது. தம்பியைவிட ஆறு மடங்கு பணம் என்னிடம் உள்ளது எனின் தம்பியிடம் உள்ள பணம் எவ்வளவு?
(i) 200 ரூபா (ii) 150 ரூபா (iii) 100 ரூபா

15) சுசி சசியை விட உயரமானவள் . சசி சீதாவைவிட உயரமானவள். சீதா சங்கீதாவைவிட குட்டையானவள். சுசி சங்கீதாவைவிட உயரமானவள் எனின் இவர்களில் மிகவும் உயரம் கூடியவள் யார்?
(i) சசி (ii) சுசி (iii) சீதா

16) குளத்தில் நிதமும் இருப்பவை
(i) கரை (ii) நீர் (iii) மீன்கள்


17) ஒரு நாவலில் நிதமும் இருப்பவை
(i) கதைகளும், சம்பவங்களும் (ii) எழுத்துக்களும், கருத்துக்களும்
(iii) பக்கங்களும், பிழைகளும்

- **18ஆம் 19ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் உட்கருத்தினை தெரிவு செய்க.**

18) நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்
(i) நல்லதைப் பேசினால் நன்மை கிடைக்கும்
(ii) நாக்கு நன்மை, தீமையை சுவைபார்க்கிறது
(iii) நமக்குக் கிடைக்கின்ற நல்லது கெட்டதெல்லாம் நாம் பேசுகின்ற பேச்சிலேயே தங்கியுள்ளது

19) போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
(i) போதும் என்று இருந்தால் பொன்னால் மருந்து செய்யலாம்
(ii) உள்ளதைக் கொண்டு திருப்தியடைதல் வேண்டும்
(iii) மனத்திருப்திப்பட்டால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

- **பின்வரும் உறவு முறைக் கோலத்தை இனங்கண்டு 20ஆம் 21 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**





20) பார்வதியின் பெரியப்பா யார்?
(i) கந்தசாமி (ii) நாராயணன் (iii) நல்லதம்பி

21) கந்தசாமி - புஷ்பராணியின் பேத்தி யார்?
(i) லட்சுமி (ii) பார்வதி (iii) அன்னம்மா


22) தொழிற்சாலை பாடசாலைக்கு மேற்கே உள்ளது. பாடசாலை வாசிகசாலைக்கு மேற்கே உள்ளது ஆகவே
(i) தொழிற்சாலை வாசிகசாலைக்கு மேற்கே உள்ளது .
(ii) வாசிகசாலை தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ளது
(iii) வாசிகசாலை பாடசாலையிலும் பார்க்க தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ளது.



- **23ஆம் 24 ஆம் வினாக்களில் புள்ளிக் கோடிடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.**

23)



(i) 200 (ii) 50 (iii) 100


24)



(i) 65 (ii) 44 (iii) 34

25) பின்வரும் குறுக்கெழுத்துப்புதிரில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்துகீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப்புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவிக் சுற்றுக்களைப் பயன்படுத்துக.

இடமிருந்து வலம்
1. பிரிவுக்க ஒத்தது
3. ஐம்பூதங்களில் ஒன்று

மேலிருந்து கீழ்
1. சகோதரிக்கு ஒத்தது
2. பாம்பு, கறையான் வாழுமிடம்





26)

| | | |
|---|---|---|
| தரகு | பிறகு | புனித |
| தும்பி | பதவி | வித்து |

அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டு உள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொற்களை புள்ளிக் கோடுகளின் மீது எழுதுக.

புனித → தரகு → குருவி → ................ → ................ → ................

# அக்கரைக் கிராம மக்களுக்கு விரைவில் காணி உரிமங்கள்



அக்கரைக் கிராம மக்களின் காணி உரிமங்களை பெறுவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய அச்சுவேலி இடைக்காடு அக்கரைக் கிராமப் பகுதி மக்களின் காணி உரிமங்களை பெற்றுக் கொள்வது தொடர்பிலான கலந்துரையாடல் ஈ.பி.டி.பி.யின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் அக்கரைக்கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்ட வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அப்பகுதி மக்களின் காணி உரிமங்களைப் பெறுவது தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் உடனிருந்தனர்.

# மகாவலி ஆற்றில் மிதந்தது ஆணின் சடலம்

(கொழும்பு)

கண்டி, கட்டுகஸ்தோட்டை பகுதியில் மகாவலி ஆற்றிலிருந்து ஆணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவிற்கு கிடைத்த தகவலின் பிரகாரம், கட்டுகஸ்தோட்டை, நவயாலதென்ன ரயில் கடவைக்கு அருகில் மகாவலி ஆற்றிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணமான நபரின் ஆடையில் இருந்து கண்டி மாநகர சபையின் அடையாள அட்டையொன்றும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கண்டி மகியாவை பகுதியைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதுடன், உறவினர்களால் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

# இலங்கைப் பெண்ணுக்கு சவுதியில் 1200 கசையடி தண்டனை

சவுதி அரேபிய நீதிமன்றத்தினால் 1200 கசையடிகள் விதிக்கப்பட்டுள்ள தனது மனைவியை விடுதலை செய்துதருமாறு அதிகாரிகளிடம் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கசையடிக்கு மேலதிகமாக 12 வருடகால சிறைத்தண்டனையும் அந்தப் பெண்ணுக்கு விதிக்கப்பட்டுள்ளதாக அவரின் கணவரான சந்ரசிறி வீரசேகர என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

நிக்கவெரட்டிய, விட்டிகுழிய, வதுவெஸ்ஸ பகுதியைச் சேர்ந்த இலங்கைப் பெண் ஒருவருக்கே சவுதியில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் ஜித்தாவிலுள்ள மலாஸ சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் 2006 ஆம் ஆண்டு மே மாதம் வீட்டுப் பணிப பெண்ணாக சவுதி அரேபியாவிற்கு தொழில்வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளார்.

பணியாற்றிய வீட்டில் திருடிய குற்றச்சாட்டின் பேரில் சில வருடங்களுக்கு முன்னர் இந்தப் பெண், சவுதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகள் குறித்து வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய கருத்துத் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுக்குத் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்கின்றவர்களுக்கு அந்தந்த நாடுகளின் சட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்ட பின்னரே அனுப்பி வைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

## வலய மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டி

2014 ஆம் ஆண்டுக்கான வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் வரிசையில் எழுத்தாக்கப் போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கோட்டமட்டப் போட்டிகளில் தெரிவாகியுள்ள முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்களுக்கான போட்டிகளாக இவை இடம்பெறவுள்ளன. நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இப்போடடிகள் நடைபெறவுள்ளதால் இப்போட்டிகளில் பங்குபெறும் பாடசாலை மாணவர்கள் உரியநேரத்திற்கு சமூகமளித்து போட்டிகளில் பங்குபெற ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.(17)

# விண்ணப்பம் கோரல்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகளாக க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் இரண்டு திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியுடன் வயது 18 - 45 இடைப்பட்டவராகவும், உடல் நலத்துடன் சிறந்த பண்புகளை கொண்டவராகவும், இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை , கொழும்பு -05. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேணடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவிக்கான திறந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளல் எனக் குறிப்பிடல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் கல்வித்தகைமை, அனுபவம், தொழில்சார் தகைமைகள் என்பனவற்றில் காட்டப்பட்ட திறமை அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை திகதி திணைக்களத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். (105)

## மண்டலாபிஷேகம் நிறைவு

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயமாகக் கருதப்படும் உரும்பிராய் பரத்தைப்புலம் கருணாகரப் பிள்ளையார் கோவிலின் 48 நாள் மண்டலாபிஷேகத்தின் நிறைவு விழா நாளை மறுதினம் 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் வெகு விமர்சையாக இடம்பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டை அடுத்து அன்னதானம் வழங்கலும் இடம்பெறும்.

எனவே, பக்த அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (85)


# அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஆய்வுகூட கட்டடத்தொகுதி திறப்பு




சிங்கப்பூர் நாட்டின் பௌத்த நட்புறவு நிலையத்தின் 2.5 மில்லியன் ரூபா நிதியுதவியில் அமைக்கப்பட்ட அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் புதிய விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் பி.சந்திரபாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிங்கப்பூர் நாட்டின் பௌத்த நட்புறவு நிலையத்தின் அதிகாரி வீரசன்டிபோன் கலந்துகொண்டு கட்டடத்தொகுதியின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் பி.சந்திரபாபு, ஆசியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் க.பொ.த.சாதாரணம் வரை வகுப்புக்களைக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தில் பங்குனிமாத சிவன் வருடாந்த உற்சவத்தின் பஞ்சரத பவனிக்காக பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுவதையும் தேர் வீதியுலா வரும் காட்சியையும் காணலாம். (50)

# போர் விமானங்களை போலந்திற்கு அனுப்புகிறது பிரான்ஸ்




சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த உக்ரேனின் ஒரு பகுதியான கிரிமியாவை ரஷ்யா இணைத்துக்கொள்வது தொடர்பாக நேட்டோ நாடுகளுக்கும் ரஷ்யாவிற்கும் கருத்து வேறுபாடு எழுந்துள்ளது.

இதனால் பாதுகாப்புக் கருதி போலந்து மற்றும் பால்டிக் நாடுகளுக்கான விமானக்கண்காணிப்பிற்கு 4 போர் விமானங்களை அனுப்புவதாக பிரான்ஸ் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

நேட்டோ நட்பு நாடுகளான எஸ்டோனியா, லிதுவேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுக்கு தற்போது விஜயம் செய்துவரும் பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் ஜீன் யுவெஸ் லீ டிரியன் விமான ரோந்துக்கு உதவுவதான இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

எஸ்டோனியாவின் தலைநகர் டலினில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். இந்த விமானங்களுடன் ஒரு ஏ.டபிள்யு.ஏசி கண்காணிப்பு விமானம், ராடர் போன்றவையும் வழங்கப்படும் என்றும் இந்தக் கண்காணிப்பு விமானம் நெருக்கடி மிகுந்த தளங்களின் அருகில் குறிப்பாக போலந்து மற்றும் லிதுவேனியா நாடுகளின் அருகில் இருந்து செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## உலகளாவிய தேடுதல் வேட்டை கரைந்தது 2.5 மில்லியன் டொலர்கள்



காணாமற் போன மலேசிய விமானத்தை தேட 2.5 மில்லியன் டொலர்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் காணாமற்போன மலேசிய விமானத்தை தேடும் பணியில் உலகநாடுகள் பலவும் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இதுவரை காணாமற் போன விமானத்தை பற்றி முழுமையாக தகவல் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் அமெரிக்காவின் இராணுவ தலைமை அலுவலகம் பெண்டகன் தரப்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் அமெரிக்கா சார்பில் காணாமற் போன மலேசிய விமானத்தை தேடும் பணியில் விமானங்களும் இந்தியா மற்றும் சீனக்கடற்பகுதிகளில் தேடுவதற்கு கப்பல்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.


இதுவரை விமானத்தை தேடும் பணிக்காக 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டுள்ளது.

தேடுதல் பணிக்காக 4 மில்லியன் அமெரிக்க டொலர் வரை பட்ஜெட் போட்டிருப்பதாக பெண்டகன் செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதாவுக்கு எதிராக தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவேன்

### விஜயகாந் சூளுரை

உலகச் செய்திகள்



ஜெயலலிதாவால் அதிகம் பாதிக்கப்பட்டதால் அவரை எதிர்த்து தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவேன் என்று தே.மு.தி.க. தலைவர் விஜ யகாந்த் கூறியுள்ளார்.

பா.ஜ.க. கூட்டணியில் இணைந்த அவர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் பா.ம.க. இடம்பெற்றுள்ள கூட்டணியில் நாங்கள் இடம் பெற்றுள்ளதற்குக் காரணம், மக்கள் நலனுக்காகவே. அதற்காகத்தான் சேர்ந்துள்ளோம்.மேலும் முதல்வர் ஜெயலலிதாவால் அதிகம் பாதிக்கப்பட்டவன் நான்தான். எனவே கண்டிப்பாக அவருக்கு எதிராக பிரசாரம் செய்வேன் என்றார்.

பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள விஜயகாந்த் கட்சி 14 தொகுதிகளில் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐக்கியநாடுகள் சபை தலையிட்டாலும் இத்தாலிய வீரர்களை விடுவிக்கக்கூடாது

### கேரளா முதல்வர் வலியுறுத்து

கேரளா மீனவர்களை சுட்டுக் கொன்ற வழக்கில் தொடர்புடைய இத்தாலிய கடற்படை வீரர்களை ஐ.நா. சபை தலையிட்டாலும் விடுவிக்கக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கேரளா முதல்வர் உம்மன் சாண்டி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் பிரதமருக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 முதலாம் இல இத்தாலிய கடற்படையினரால் கேரளாவையொட்டிய கடற் பகுதியில் இந்திய மீனவர்கள் 2 பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக் கைது செய்யப்பட்ட 2 இத்தாலி கடற்படை வீரர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தக்கூடாது என இத்தாலிய அரசு நெருக்கடி கொடுத்து வருகிறது. இந்நிலையில் இந்தியாவுக்கு வருகை தரவுள்ள ஐ.நா.பொதுச் சபைத் தலைவர் ஜான் வில்லியம் ஆஷ்இந்த வழககில் இத்தாலிய வீரர்களுக்கு ஆதரவாகப் பேசவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு நீங்கள் இணங்கி விட வேண்டாம். இந்த வழக்கின் போக்கை



கேரளா மக்கள் உன்னிப்பாக கவனித்துவரும் நிலையில், முறையான விசாரணைக்கு உட்படுத்தாமல் இத்தாலிய வீரர்களை விடுவித்து விட்டால் மக்களுக்கு சட்டத்துறை மீது அவநம்பிக்கை ஏற்பட்டு விடும். நீதித்துறையின் மீதான கண்ணியத்தையும் குறைத்து மதிப்பிடப்பட வழியேற்படும் என்று உம்மன் சாண்டி கூறியுள்ளார்

## தோல்விப்பயத்தால் சிதம்பரம் தேர்தலில் போட்டியிடவில்லை

### தமிழக முதல்வர் ஜெயலலிதா



தோல்வி ஏற்படும் என்ற பயத்தினால்தான் மத்திய நிதியமைச்சர் ப.சிதம் பரம் இந்தமுறை தேர்தலில் போட்டியிடவில்லை என்றும், நாட்டின் வளர்ச்சி சரிந்துள்ளதற்கு அவரே காரணம் என்றும் தமிழக முதல்வரும், அ.தி.மு.க. பொதுச் செயலருமான ஜெயலலிதா தெரிவித்தார்.

சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியின் அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் மேற்கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்:

"இந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அமைச்சரான சிதம்பரம் உங்களுக்கு ஏதாவது செய்தாரா? இல்லை. உங்கள் வளர்ச்சியிலும் ப. சிதம்பரம் அக்கறை செலுத்தவில்லை. நாட்டின் பொருளாதாரத்திலும் அக்கறை செலுத்தவில்லை. இந்தியப் பொருளாதாரம் நிலைகுலைந்து போயிருபபதற்கு சிதம்பரத்தின் நடவடிக்கையும் முக்கிய காரணம்.

மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் நிதி அமைச்சராக 2004-ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2008-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை சிதம்பரம் இருந்தார். மீண்டும் 2012-ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் நிதி அமைச்சராக பொறுப்பேற்றார். இவரது காலத்தில் தான் இந்திய நாட்டின் வளர்ச்சி சரிந்துள்ளது. பண வீக்கம் அதிகரித்துள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்துள்ளது. மொத்தத்தில் இந்திய நாட்டின் பொருளாதாரம் அழிவின் விளிம்பிற்கே சென்றுவிட்டது என்றார்.

## தீவிரவாதிகளின் கடத்தல்பட்டியலில் ராகுல், கேஜ்ரிவால், நரேந்திர மோடி



மக்களவைத் தேர்தல் பிரசாரத்தின் போது அரசியல்வாதிகளை கடத்த இந்தியன் முஜாகிதீன் தீவிரவாத அமைப்புத் திட்டமிடடிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்த தீவிரவாத அமைப்பின் பட்டியலில் ராகுல் காந்தி, நரேந்திர மோடி, அர்விந்த் கேஜ்ரிவால் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பாக் டில்லி, உத்தரப் பிரதேசம் மற்றும் பீஹார் மாநில அரசுகள் எச்சரிக்கப்பட்டுள்ளன.

தீவிரவாதிகளின் பட்டியலில் காங்கிரஸ்த் தலைவர் ராகுல் காந்தி, ஆம் ஆத்மி கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவால், பா.ஜ.க.வின் பிரத்மர் வேட்பாளர் நரேந்திர மோடி ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவர்களின் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்த பரிந்துரைகள் கடந்த வியாழக்கிழமை அனுப்பப்பட்டுள்ளது.

## முத்தமிட்ட பெண் தற்கொலை ராகுல்காந்தி மீது புகார்



ராகுல்காந்தியை முத்தமிட்ட பெண் தீக்குளித்து மரணமடைந்ததால் [illegible] பொலிஸ் நிலையத்தில் தன்னார்வ அமைப்பு ஒன்று புகார் கொடுத்துள்ளது. காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, அசாமில் ஜோரத் என்ற இடத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி பெண்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பொண்டி சுட்டியா என்ற இளம்பெண், அவரது கன்னத்தில் முத்தமிட்டார். அந்தக் காட்சி, தொலைக்காட்சிகளில் காட்டப்பட்டது. இதையடுத்து வீடு திரும்பிய அவருக்கும், அவரது கணவர் சோமேஷ்வர் சுட்டியாவுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதில் மனம் உடைந்த பொண்டி சுட்டியா தீக்குளித்து உயிரிழந்தார். அவரைக் காப்பாற்ற முயன்ற கணவர் படுகாயம் அடைந்தார். இந்நிலையில், அந்தப் பெண்ணை தற்கொலைக்கு தூண்டியதாக ராகுல் காந்தி, அசாம் முதலமைச்சர் தருண் கோகாய், மாநில காங்கிரஸ் தலைவர் புவனேஷ்வர் கலிதா ஆகியோர் மீது நரி முக்தி சங்கராம் சமித் என்ற அமைப்பு ஜோரத் பொலிஸ் நிலையத்தில் புகார்கொடுத்துள்ளது.

# மிகமோசமான நிலையில் குமிழமுனை உள்ளக வீதிகள்

## கிராம மக்கள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் குமிழமுனை கிராமத்திலுள்ள உள்ளக வீதிகள் நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதாக கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

3 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய குமிழமுனை கிராமத்தின் உள்ளக வீதிகள் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கிரவல் இட்டு புனரமைக்கப்பட்ட நிலையில் யுத்தம் நிறைவடைந்து நீண்டகாலமாகியும் இவ்வீதி மிகமோசமான நிலையில் சேதமடைந்து புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

குறிப்பாக இக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி வாழ்வாதார ரீதியாக வாழ்ந்துவரும் நிலையில் அத்தியாவசிய வசதியான வீதிப்புனரமைப்பு எட்டாக் கனியாகவே இருப்பதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது இவ்வீதியால் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களோ பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சிலவேளைகளில் விபத்துக்கள் ஏற்படும் நிலையும் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இக்கிராம மக்களின் நலன் கருதி இக்கிராமத்தின் உள்ளக வீதிகளை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (67)

# புகையிரத பயணிகளுக்கான பேருந்து சேவை ஆரம்பம்

பளையிலிருந்து கொழும்புக்கு புகையிரதத்தில் செல்லும் வடமராட்சி மக்களின் நன்மை கருதி பருத்தித்துறை இ.போ.ச சாலையினால் பளைக்கான பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இச்சேவை தினமும் காலை 6.00 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு நெல்லியடி, வரணி, கொடிகாமம் ஊடாக பளையை அடையும்.

பின்னர் அப்பேருந்து அங்கு தங்கிநின்று மாலை கொழும்பிலிருந்து குறிப்பிட்ட புகையிரதத்தில் வரும் வடமராட்சி மக்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை வந்தடையும்.

இச்சேவையால் வடமராட்சியில் அரச சேவையிலுள்ளவர்கள் மற்றும் தேவை நிமித்தம் செல்லும் மக்கள் தாம் மிக நன்மையடைவதாக மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (109)

# கிராம அலுவலர்களது இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள 72 கிராம அலுவலர்களது இடமாற்றங்களை உடன் நடைமுறைப்படுத்துங்கள். இவ்வாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கோரியுள்ளனர்.

இடமாற்றம் வழங்கப்பட்டு இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத 72 கிராம அலுவலர்களது இடமாற்றம் தொடர்பாக தெரிய வருவதாவது,

யாழ். மாவட்டத்தில் ஒரே கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றி வருகின்றனர்.

மேற்படி கிராம அலுவலர்கள் இடமாற்றம் குறித்து இரண்டு தடவைகள் பிற்போடப்பட்டுள்ளன.

இவ்வாறான கிராம அலுவலர்கள் தொடர்ந்தும் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 10 முதல் 15 ஆண்டுகள் கடமையாற்றுவதனால் மக்களுக்கு பயனுள்ள சேவைகள் கிடையாது போய் விடுகின்றன.

எனவே அரசாங்க அதிபர், கிராம அலுவலர்களது இடமாற்றத்தில் கூடிய கவனமெடுத்து துரிதமாக செயற்படுத்த வேண்டுமென பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை பெரும்பாலான பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளக இடமாற்றம் இடம்பெறுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (92)

# முதலாம் தவணை பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாண கல்விவலயப் பாடசாலைகளின் முதலாம் தவணைப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதில் தரம் 11 மாணவர்களுக்கான பரீட்சைகள் முதலில் ஆரம்பமாவதுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய வகுப்புக்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகள் தொடர்பான நேரசூசிகள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்களும் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தரம் 11 இற்கான பரீட்சை வினாத்தாள்கள் வலயக்கல்வி அலுவலகத்தினாலும், ஏனைய வகுப்புக்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களினாலும் தயாரிக்கப்பட்டு பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன. (03)

# ஆசிரியர்களுக்கு பயிற்சிநெறி

தரம் 6, 10 ஆகிய வகுப்புகளில் அடுத்த வருடத்தில் அமுல்படுத்தப்படவுள்ள விஞ்ஞான பாட மறுசீரமைப்புத் தொடர்பாக ஆசிரியர் பயிற்சி மத்திய கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய தரம் 6, 10 வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு யாழ்ப்பாண கல்வி வலயத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இடைநிலைப் பிரிவில் தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களினதும் விபரங்கள் யாழ் கல்வி வலய விஞ்ஞானப் பிரிவால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி விசேட பயிற்சிச் செயலமர்வு தொடர்பாக அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதுடன் ஆசிரியர்களின் விபரங்களைச் சேகரித்துக் கொள்வதற்காக அதற்குரிய விண்ணப்பப்படிவ மாதிரியும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டுள்ள விபரங்களையும் சரியான முறையில் பூர்த்தி செய்து அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்திப் பிரிவு, யாழ்ப்பாண கல்வி வலயம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (03)

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவு

## உறுதிப்படுத்தினார் கமரூன்



(கொழும்பு)

இலங்கைக்கெதிராக ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட இருக்கும் தீர்மானத்திற்கு அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினதும் ஆதரவைத் தாம் உறுதி செய்திருப்பதாகப் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியப் பேரவையில் நடைபெற்ற உயர்மட்ட சந்திப்புக்களைத் தொடர்ந்து நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்துரைத்திருக்கும் டேவிட் கமரூன், கடந்த காலங்களில் நிகழ்ந்தேறிய சம்பவங்களுக்கு சரியான தீர்வை எட்டும் வகையில் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்பதே தனது அவா என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதனை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளத் தவறியிருக்கும் நிலையில் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு இப்பொழுது தேவைப்படுவது பன்னாட்டு சுயாதீன விசாரணை என்றும் தெரிவித்துள்ளார்.

இதுவிடயத்தில் தான் ஆழமான கரிசனையைக் கொண்டிருப்பதோடு, இதற்கென அடுத்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட இருக்கும் தீர்மானத்திற்கு நேற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுமையான ஆதரவைத் தான் உறுதி செய்திருப்பதாகவும் பிரித்தானியப் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தொடர்...

சேர்ந்தவர் என்றும் 35 வயதுடையவர் என்றும் திருமணத்திற்காக ஜேர்மனிக்கு செல்ல விருப்பதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (70)

## சி.ஐ.டி.யினர்...

இதன்போது அலுமாரியில் வைக்கப்பட்ட நகைகளை எடுத்ததுடன், துப்பாக்கியை காட்டி சத்தம் போடக்கூடாது எனக்கூறி இருவரையும் மிரட்டியதுடன், அறையில் வைத்து பூட்டிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி 8 இலட்சத்து 66 ஆயிரம் ரூபா வரையில் இருக்கும் என விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (10)

## சொந்த...

மீதான அழுத்தங்கள் உக்கிரமடைந்துள்ளதாகவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஜேன் பாஸ்கீ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மனித உரிமை செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்னாண்டோ மற்றும் வணக்கத்திற்குரிய பிரவீன் மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டமை கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மண்டைதீவில்...

அத்துடன் வேலணை பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வந்த பவுசர் மூலமான குடிநீர் விநியோகமும் தடைப்பட்டிருப்பதும் இந்த நிலையை மேலும் மோசமடையச் செய்யும் நிலை உருவாகியுள்ளது.

இந்தக் கிராமத்தில் சுமார் 575 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேர் வரையில் வசித்து வரும் நிலையில் இந்தப் பகுதி மக்களின் குடிநீர் தேவை பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும் நிலையும் உள்ளது.

கடந்த ஆண்டு மழைவீழ்ச்சி குறைந்ததன் காரணமாகவும் இந்நிலை மேலும் மோசமடைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

## புலிகள்...

இது தொடர்பில் பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடையும் காலகட்டத்தில் இராணுவத்திடம் சரணடைந்த கோபி பூந்தோட்டம் முகாமிலிருந்து தப்பி வேலைவாய்ப்புக்காக கட்டார் சென்றுள்ளார்.

அதன் பின்னர் ஐரோப்பாவிற்கு சுற்றுலா மேற்கொண்டு தமிழ் புலிகள் புலம்பெயர் அமைப்பின் தலைவர் என்று கூறப்படும் பெரும்நாயகம் சிவபரன் என்றழைக்கப்படும் நெடியவனை நோர்வேயில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அவரிடம் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு இலங்கைக்கு திரும்பிய அவர், புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான சண்முகலிங்கம் சிவசங்கர் என்றழைக்கப்படும் ஜயகுமார் பாலேந்திரன் (பொட்டு அம்மானின் கீழ் பயிற்சிபெற்றவர்) கிளிநொச்சி தர்மபுரத்தில் விதவை பெண்ணொருவரின் வீட்டில் இருக்கும் போது பொலிஸார் கைது செய்வதற்கு சென்றிருந்த வேளை நூலிழையில் தப்பிவிட்டார்.

அவரை கைது செய்வதற்கு நிராயுதபாணியாகச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிளின் வயிறு மற்றும் பாதத்தின் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு அந்தவீட்டிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோபியும் அந்த வீட்டில் இருந்ததாகவே பயங்கரவாத புலனாய்வு பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீர்மானத்திற்கு...

எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், தென்கொரிய அரசாங்கத்தை அதற்குச் சாதகமாகத் திருப்பும் வகையிலான, நன்கு திட்டமிடப்பட்ட நகர்வு இது என்று அந்த வட்டாரங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள 47 நாடுகளில் தென்கொரியாவும் ஒன்றாகும். அமெரிக்கத் தீர்மானத்துக்கு நவநீதம்பிள்ளை வெளிப்படையாக ஆதரவு கோரி வருகிறார். முன்னாள் தென்னாபிரிக்க அதிகாரியான அவர், தனது சொந்த நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது கூட வடகொரியாவுடன் ஒப்பிடப்படும் நிலையை இலங்கை சந்தித்திருக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது.

# ஜெனிவா பிரேரணை குறித்து தெளிவுபடுத்த வேண்டும்

## மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து, தமது சங்க சபைகளின் பிக்குமாருக்கு தெளிவுபடுத்துமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இந்த பிரேரணை நாட்டை மீண்டும் அழிவுக்கு இட்டுச் செல்லும் முயற்சி என சுட்டிக்காட்ட முடியும் எனவும் மாநாயக்க தேரர்கள் கூறியுள்ளனர்.

நாட்டின் வரலாற்றில் இவ்வாறான பிரச்சினைக்குரிய நிலைமைகள் ஏற்பட்ட போது அதனை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் உரிமை மல்வத்து மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் பௌத்த தேரர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், ஜெனிவா மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகள் குறித்து சங்க சபையினருக்கு தெளிவுபடுத்த அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த சந்தர்ப்பத்தை பெற்றுத் தருமாறும் மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளனர்.


## ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரேரணை தொடர்பில் தங்களுக்கு தெளிவுபடுத்துமாறு மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர். அதற்கே ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# தகவல் கொடுத்தால் 20 இலட்சம் சன்மானம்



அப்பன்



கோபி

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக தேவைப்படுகின்ற இரண்டு நபர்கள் தொடர்பில் தகவல்களை தருவோருக்கு தலா 10 இலட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கஜீபன் பொன்னய்யா செல்வநாயகம் அல்லது கோபி அல்லது காசியன் என அழைக்கப்படும் வயது 31. உயரம் 06 அடி. பொது நிற தோற்றத்தையும் கொண்டவர் இவரது இடதுபக்க உதட்டின் மேல் பகுதியில் வெட்டுக்காயம் உள்ளது.

இவர் பற்றி ஏதாவது தகவல் கிடைக்கப்பெற்றால் தொலைபேசி இலக்கம் 011-2451636 பக்ஸ் 011-2321838 ஆகிய இல்க்கங்களுடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

தகவல் தருபவருக்கு 10 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்றும் தகவல் தருபவர் பற்றிய இரகசியம் பேணப்படும். என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

நவரத்னம் நவநீதன் அல்லது அப்பன் என்றழைக்கப்படும் வயது 36. உயரம் 5அடி 2 அங்குலம் பொது நிற தோற்றத்தையும் கொண்டவர். இவர் பற்றி ஏதாவது தகவல் கிடைக்கப்பெற்றால் தொலைபேசி இலக்கம் 011-2451636 பக்ஸ் 011-2321838 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும். தகவல் தருபவருக்கு ரூபா 10 இலட்சம் வழங்கப்படும் என்றும் தகவல் தருபவர் பற்றிய இரகசியம் பேணப்படும். என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கால்நடைகளை ஏற்றிச்செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை தளர்வு

(கொழும்பு)

கால்நடைகளை ஏற்றிச் செல்வதற்காக சில பிரதேசங்களில் விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூன்று வார காலப்பகுதிக்குள் நோயினால் பீடிக்கப்பட்ட கால்நடைகள் குறித்து பதிவாகாத பிரதேசங்களில் தடையைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் குமார டி சில்வா தெரிவித்தார்.

தடை தளர்த்தப்பட்டுள்ளமைக்கான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் சில தினங்களுக்குள் வெளியிடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கால்நடைகளின் கால் மற்றும் வாயில் நோய் ஏற்பட்டமையினால், 8 மாவட்டங்களில் ஆடு, மாடு மற்றும் பன்றிகளை ஏற்றிச்செல்வதற்கு அண்மையில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதுவரை சுமார் 12 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான கால்நடைகளின் கால் மற்றும் வாயில் நோய் தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கால் மற்றும் வாயில் நோய் தொற்றியமையினால் சுமார் 260 இற்கும் அதிகமான ஆடு, மாடு, பன்றி போன்ற கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## குற்றவாளிகளை தூக்கிலிட தயார் என்கிறார் கரலியத்த

(கொழும்பு)

எப்படியான நரகத்திற்குச் சென்றாலும் குற்றவாளிகளை தூக்கிலிட்டு கொல்ல தான் தயாராக இருப்பதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாலியல் வல்லுறவு, கொலை மற்றும் போதைப் பொருள் விற்பனை போன்ற பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மரண தண்டனையை அமுல்படுத்த இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

நாட்டில் உள்ளவர்கள் பிரம்புக்கு அஞ்சியவர்கள், தண்டனைக்கு அஞ்சியவர்கள்.

அமைச்சர் ஒருவரினால் சட்டத்தை அமுல்படுத்த முடியாது. குற்றவாளிகளை தூக்கிலிட்டு கொலை செய்யும் அதிகாரத்தை வழங்கினால், எந்த நரகத்திற்குச் சென்றாலும் குற்றவாளிகளை தூக்கிலிட தயார் எனவும் அமைச்சர் கரலியத்த குறிப்பிட்டுள்ளார்.

## சியாராலியோன் போன்று இலங்கைக்கும் விசேட நீதிமன்று

### கோரிக்கை விடுக்கும் பிரிட்டன்

(கொழும்பு)

சியாராலியோனுக்கு எதிராக ஐ.நா. சபையின் உதவியுடன் அமைக்கப்பட்ட விசேட சர்வதேச நீதிமன்ற விசாரணையைப் போன்று, இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு பிரித்தானியா கோரிக்கை விடுத்துள்ளதாக ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் அழுத்தங்களின் அடிப்படையிலும் அமெரிக்காவின் ஜெனிவா யோசனைக்கு இந்தியா ஆதரவளிப்பதாக அறிவித்தமையையும் அடுத்தே பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் இந்தப் புதிய கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள யோசனைக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சியாராலியோனில் ஜனாதிபதி சார்ல்ஸ் டெய்லருக்கு எதிராக அமைக்கப்பட்டமையை போன்று விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டால் அதன் மூலம் இலங்கையின் காயங்களுக்கு தீர்வு கிட்டும் என்று வில்லியம் ஹேக் குறிப்பிட்டுள்ளார்.

## பயிற்சியில் பெண்கள் துன்புறுத்தல் விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பெண்களை துன்புறுத்துவது போன்று இணையத்தில் வெளியாகியுள்ள காணொளி குறித்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்கா தெரிவித்துள்ளார்.

இராணுவப் பயிற்சியின் போது பெண்களுக்கு அடிப்பது, அவர்களை வற்புறுத்தி பயிற்சிக்குட்படுத்துவது போன்று அந்தக் காணொளியில் பதிவாகியுள்ளது.

அதேவேளை பயிற்சியில் ஈடுபடாத பெண்களை, ஆண் இராணுவத்தினர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு திட்டுவது குறித்தும் அதில் பதிவாகியுள்ளது.

குறித்த காணொளி 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அநுராதபுரத்தில் வைத்து எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பதிவு காட்டுகிறது.

இணையத்தில் வெளியான காணொளியை பார் வையிட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்த காணொளியின் உண்மைத் தன்மையை சோதித்து விசாரணை மேற்கொள்ளுமாறு இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

## நியூஸிலாந்து வெற்றி



சர்வதேச ருவென்ரி 20 கிண்ண பிரிவு ஒன்றிற்கான இங்கிலாந்துடனான போட்டியில் நியூஸிலாந்து அணி டக்வேர்த் லூவிஸ் முறைப்படி ஒன்பது ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சிட்டகொங் மைதானத்தில் நேற்றைய தினம் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக லம்ப் 33, அலி 36, பட்லர் 32, போபரா ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 2, சௌத்தி, மைக்கிலியன், மில்ஸ், மக்கலம் ஆகிய நால்வரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து 173 என்ற ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 5.2 ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றவேளை மழை குறுக்கிட்டது. இதனால் போட்டி தடைப்படவே குறித்த ஓவரில் 44 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், நியூஸிலாந்து அணி 52 ஓட்டங்களைப் பெற்ற தனால் அவ்வணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆட்ட நாயகனாக நியூஸிலாந்தின் அன்டர்சன் தெரிவானார்.

## ஆசிரிய கலாசாலைகளில் இறுதிப் பரீட்சை யூனில் ஆரம்பம்

ஆசிரிய கலாசாலைகளில் இறுதியாண்டுக் கற்கையை நிறைவு செய்வோருக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் யூன் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நாடெங்கிலுமுள்ள ஒன்பது ஆசிரியர் கலாசாலைகளில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கோப்பாய், அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, கொட்டகல, உணவட்டுண, பலப்பிட்டிய, கிராகம, மகரகம, பேராதனை ஆகிய ஆசிரியர் கலாசாலைகளில் இப்பரீட்சை இடம்பெறவுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்குக் கிடைக்கக்கூடியதாகக் கலாசாலைகள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் பரீட்சைகளில் சித்தி பெற்றோரும் இத்திகதிக்கு முன்னர் தாம் கல்வி கற்ற கலாசாலைகளின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.